அறைவு 02 இயம் 22 January 11 - 17 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## வெளியிடப்படாத இலங்கை மனித உரிமை அறிக்கை தெரிவிப்பு

# மாணவர் கொலைக்குப் படையினரே காரணம்




திருகோணமலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மாணவர்களின் கொலைக்குக் காரணமானவர்கள் படையினரே என்பதை உறுதிப்படுத்தியிருப்பதாக வெளியிடப்படாத இலங்கை மனித உரிமைச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய திகதியில் இலங்கை மனித உரிமைச் சபையின் ஆணையாளராக இருந்த கலாநதி ராதிகா குமாரசாமி அவர்ளகளின் பணிப்புரைக்கு ஏற்ப இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசரான..... 13

## கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்கின்றது



- ஹசன் அலி -

“சனாதிபதியும் மக்களுக்கு நிறைய வாக்குறுதிகளை வழங்கி நம்பிக்கை யூட்டியுள்ளார். நம்பிக்கைகள் வழங்கப் படுகின்றனவா? இல்லையா? என்பதல்ல முக்கியம். அவை முறையான பொறி முறைகளுடன் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அதுவே முக்கியம் இல்லாவிடின் இத்தகைய நம்பிக்கை யூட்டல்கள் மக்களிடத்தில் எதிர்மறையான விளைவுகளையே 13

## 484,000 ரூபா மோசடி

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற தொழிலாளர் சங்கத்தின் புது வருட நிதி ரூபா 484,000 மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்நிதி மோசடி செய்யப்பட்டு விட்டதாக திருகோணமலை நகராட்சி மன்ற துப்புரவுத் தொழிலாளிகள் மலை முரசிற்குத் தெரிவித்தனர்...... 13

## விண்வெளி செல்லும் முதல் ஈழத் தமிழச்சி



மிகத் திறமையான இரு மாணவிகளைத் தேர்வு செய்து விணவெளிக்கு அனுப்பும் முடிவை பிரித்தானிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எடுத்த போது அதற்குத் தேர்வான இரண்டு மாணவிகளில் ஈழத் தமிழச்சியான “சிவேன் ஞானகுலேந்திரன்” தேர்வாகித் தமிழருக்குப்.. 13

## 14 வயது மகளைப் பிரிந்து வருடங்கள் 16

மூதூரில் இருந்து சவூதி அரேபியா நோக்கிப் பயணமான ரிஸ்வானா என்ற பெண் தொடர்பான தகவல்கள் ஏதுமின்றி 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பெற்றோர் தற்போது தமது மகளைத் தேடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

தோப்பூர் பிரதேசத்தின் 58வது மைல்... 13

## கட்சி தாவுவாரா கிழக்கு மாகாண சபை உறுப்பினர்



அம்பாறை மாவட்டத்தில் இருந்து கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவாகியவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தயா கமகே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தாவும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. தயா கமகேவை இரத்மலானைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமித்ததைத் தொடர்ந்தே அவர் இம்முடிவை....... 13

## “லசந்த” 5வது ஆண்டு



சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் சர்வதேசப் புகழ்வாய்ந்த இலங்கை ஊடகவியலாளருமான லசந்த விக்ரமசிங்ஹ அவர்கள் கொல்லப்பட்டு கடந்த 8ம் திகதி.... 13

## “ஆவா” அணியின் ஆயுதங்கள்



யாழ்ப்பாணத்தில் தொடர் கொள்ளை மற்றும் கொலையுடன் சம்பந்தப்பட்ட பாதாள உலகக் குழுவைத் தலைமை தாங்கி நடத்தியவர் 21 வயதானவர் என காவல்துறை தெரிவித்துள்ளது.

“ஆவா” குழுவினர் என அழைக்கப்பட்ட அவர்களின் தலைவனான 21 வயது 13

## இரசாயனக் குண்டுகளை வீசியது விடுதலைப் புலிகளே!



இறுதி யுத்தத்தில் இரசாயனக் குண்டுகள் பாவிக்கப் பட்டதாகவும் அதனை விடுதலைப்புலிகளே படையினர் மீது பிரயோகித்ததாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க போர்க் குற்ற...... 13

## காவல்துறையில் தமிழில் முறைப்பாடு



கிழக்கிலும் காவல்துறை அலுவலகங்களில் முறைப் பாடுகளைத் தமிழில் மேற்கொள்ள முடியும் என காவல்துறை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக கிழக்கிலும் வடக்கிலும் இந்த நடைமுறை காணப்படும் எனவும் தமிழில் மறைப்பாடுகளைப் பதியாத காவல்துறை நிலையங்கள் மீது மக்கள் புகார்களை மேற்கொள்ளவும் முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

**வணக்கம்**

## அபிவிருத்தியின் மறைகுறிகாட்டியாய் கொலைகள்

மாற்றுக் கருத்து என்பது சனநாயகத்தின் விழுமியங்களில் ஒன்று. அத்துடன் கருத்துக்களைக் கூறவும் செவி மடுக்கவும் மனிதனுக்கு இருக்கும் உரிமை மனித உரிமைச்சாசனத்தில் தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழர்கள் மாற்றுக் கருத்துக்களைக கொண்டு பேச முற்பட்ட போது, மனித உரிமையைப் பற்றி வெளிக்கொணர முற்பட்ட போது தமிழரின் விடுதலைக்காகப் போராடிய ஆயுதக் குழவினர் அனைவரும் அக்கருத்துக்களையும் மாற்றுச் சிந்தனைகளையும் ஒடுக்குவதற்காக சுடுகலப்பிரயோகத்தத் தமது இன மக்களின் மீதே பாவிக்கத் தொடங்கியமையானது ஒரு பாடமாகப் பின்னாளில் பரிணமித்துவிட்டது.

ஆயுதமும், வலுவும் அமையப் பெற்றவர்கள் மாற்றுக் கருத்துக்களைக் கூற முற்பட்டவர்களை இல்லாதொழிக்க கருத்துக்களையும் நியாயங்களை முன்வைக்க முடியாது திணறத் தொடங்கினர். ஏனெனில் மாற்றுக் கருத்துக்கள் என்பவை ஆயுத பலமும் வலுவும் கொண்டவர்களின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக எழுந்தமையே காரணம் ஆகும்.

மாற்றுக் கருத்துக்கு எதிராக நியாயம் கற்பிக்க முடியாத அவர்கள் அம் மாற்றுக் கருத்துக்களை விதைத்தவர்களை கொலை செய்து விட்டால் தமது பிரச்சனை ஓய்ந்ததாகவே எண்ணிக் கொண்டனர்.

அதன் பால் விடுதலைப் போராளிகள் எதைச் செய்தார்களோ அதனைப் பாடமாகக் கொண்டு அரசாங்கமும் கருத்துக்களுக்கு சுடுகல இரவைகளைப் பரிசளித்து உயிர்களை விலையாகப் பெற்றுக்கொண்டது.

அக்கணத்திலிருந்து யார் பயங்கரவாதிகள் என்ற கேள்வி? மாற்றுக் கருத்தாளர்களுக்கு எழத் தொடங்கிவிட்டது. எனினும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்கள் மேலும் தமது குரலை உயர்த்திக்கொண்டே இருக்கின்றார்கள்.

மனிதனுக்காகத் தான் நாடு, அரசு , நிலம், கல்வி, அபிவிருத்தி என்ற அனைத்தும்.....

சுதந்திரமான மனிதனைக் காணவிடாமற் செய்யவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஆயுதக்குழுக்களும் அரசாங்கமும் பயங்கரவாதப் போர்வையைத் தம்முள் கொண்டு மனிதர்களை அடக்கியாள முற்படுகின்றன.

இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் மேற்கத்திய அரசுகள் கொல்லப்பட்டவர்களின் சார்பில் நாடுகளுக்குள் புகுந்து கொன்றவர்களை ஆட்டிப்படைக்கும் அதிநவீன காலனித்துவத்தை பயிற்சி செய்கின்றன.

புரிந்து கொண்டாலும் விடுபடமுடியாமல் அரசுகளும் அதன் சார் மற்றும் எதிர்க் குழுக்களும் இன்னும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

ஆனாலும் மாற்றுக் கருத்தாளர்கள் தமது குரலைத் தணிப்பதாயில்லை...

## சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த ஊடகவியலாளர் கைது

கந்தளாய் பிரதேசத்தில் 10 வயது சிறுமி மீது பாலியல் தொந்தரவு கொடுத்த தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

இவரை 50,000.00 பெறுமதியான இரண்டு சரீரப்பிணையில் நீதவான் சந்தருவான் திசாநாயக்கா விடுவித்தார். வழக்கு இம்மாதம் 31ம் திகதிக்கு உத்தரவிட்டுள்ளார்.


சிறகுகள் கல்வி நிலையம்
SIRAKUKAL INSTITUTION

- க.பொ.த. உயர்தர (A/L) கலைப் பிரிவுக்கான தமிழ், அரசியல், புவியியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.
- க.பொ.த. உயர்தர (A/L) வர்த்தகப் பிரிவுக்கான பொருளியல், கணக்கீடு, வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.
- தரம் 10 மற்றும் 11 மாணவர்களுக்கான தமிழ், வரலாறு, கணிதம், ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

தொடர்புகளுக்கு: தி. பவித்ரன் - 0778191678


## திவிநெகும திணைக்களத்தின் உத்தியோகபூர்வ ஆரம்ப வைபவம் - ஆலையடிவேம்பு

இலங்கையில் கடந்த 13 வருடகாலங்களாக வசதிகுறைந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்த சமுர்த்தி அதிகார சபையானது, இன்று (03) தொடக்கம் பொருளாதார அமைச்சின் கீழியங்கும் திவிநெகும திணைக்களமாக உத்தியோகபூர்வமாக மாற்றம்பெறுவதனை முன்னிட்டு அதற்கான ஆசிர்வாத வைபவம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதையும் இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமியமட்ட சமுர்த்தி அபிவிருத்திச் சங்கங்களின் தலைவிகள் ஆகியோர் பங்குபற்றியதையும் நிகழ்வில் பிரதேச செயலாளரும் , பாராளுமன்ற உறுப்பினரும் திவிநெகும திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். **(உ.உதயகாந்த்)**



## புல்மோட்டையில் சிறு சுழல் காற்றால் வீடுகள் சேதம்



தொடர்ச்சியான மழை காரணமாக 06.01.2014 ம் திகதி சுமார் இரவு 8 மணியளவில் திடீரென ஜின்னாபுரம் பகுதியில் ஏற்பட்ட சுழல் காற்றினால் புல்மோட்டையில் சில வீடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன வீட்டின் கூரைகள் கிளப்பப்பட்டு வீட்டினுள் இருந்த பொருட்கள் முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன இதனை தொட[illegible] சபை உறுப்பினர் அன்வர் அப்ப[illegible] சுபைர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளையும் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அழைத்து பார்வையிடுட்டார்.

## "அமெரிக்க கைக்கூலிகளே ஆயர்கள்"

### அட்மிரல் சரத்.பீ. வீரசேகர

நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமெரிக்காவின் பிரிவினைவாத சதித்திட்டத்திற்கு துணை போகும் யாழ், மன்னார் ஆயர்களும் பயங்கரவாதிகளே ஆவார்கள்.

இந்த இரண்டு ஆயர்களும் அழிந்து போன பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்கும் பயங்கரவாதிகளே ஆவார்கள். எனவே இவ்விருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென தொழில் மற்றும் தொழிலாளர்கள் உறவுகள் பிரதியமைச்சர் ரியர் அட்மிரல் சரத் பி.வீரசேகர தெரிவித்தார்.

## ஆயுதங்கள் மீட்பு

ஆண்டான்குளக்கட்டுப் பகுதியில் சுமார் 50 துப்பாக்கி ரவைகளும் இரண்டு கைக்குண்டுகளும் விமானப்படையினர் மற்றும் குச்சவெளி காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

துப்புத் தகவல் ஒன்றின் பேரில் அம்பாறையில் இருந்து வந்த விமானப் படையினர் குச்சவெளி காவல் துறையினரின் உதவியுடன் இவற்றை மீட்டுள்ளனா. இவற்றுள் 45 சினைப்பர் துப்பாக்கி ரவைகளும் அடங்குகின்றன.

(கீத்)

## NVQ சான்றிதழ் பயிற்சி நெறிகள் திருகோணமலையில்

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் NVQ ஆரம்பநிலையை தொடர்வதற்கான சான்றிதழ் பயிற்சி நெறிகள் தற்போது திருமலை லவ்லேன் இலங்கை மின்சார சபைக்கு அருகாமையில் உள்ள லவ்லேன் பயிற்சி நிலையத்தில் 10.01.2014 தொடக்கம் அனுமதிகள் வழங்கப் படவுள்ளது.

பயிற்சி நெறிகளாக கணனி (Conouter Application Assistance), தையல், நீர்க்குழாய் பொருத்துதல், ஆயுள்வேத சிகிச்சை முறை ஆகிய 6மாதகால பயிற்சி நெறிகள் இலவசம்.

அழகுக்கலை, மொழிப்பயிற்சி, கைப்பாணிப்பொருட்கள், சமையல், சிற்பக்கலை, நாட்டியம், நடனக்கலை, மக்கள் தொடர்பாடல் ஆகிய 6மாத கால பயிற்சி ரூபா 6000/- கட்டணங்கள் செலுத்தியும்,

மேசன், பூங்கா அலங்கரித்தல், மின்சார தொழிநுட்பம், கணணி (Hard ware) ஆகியவை முறையே 5000/- கட்டணமாகவும் 6 மாத காலத்திற்கு இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தகவல்:** உதவிப்பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மாவட்டக்காரியாலயம், கச்சேரி திருமலை.
T.P:- 0262222034

**தொடர்புகளுக்கு:-** நிலைப் பொறுப்பதிகாரி, லவ்லேன் பயிற்சி நிலையம், லவ்லேன், திருகோணமலை.
T.P:- 026-2053606, 0711996654
0714471293

**கலைச்செல்வன்**

**NAIIONAL YOUTH SERVICES COUNCIC**
(Ministry of youth Affairs and Skill Developenent)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 150,000 மேற்பட்ட இரட்டிப்பு அடையாள அட்டை எண்கள் பாவனையில்

நாட்டில் 150,000 மேற்பட்ட இரட்டிப்பு அடையாள அட்டை எண்கள் பாவனையில் உள்ளதாக தெரிகின்றது. ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஏற்பட்ட பிழைகளாலேயே இவ்வாறு இரட்டிப்பு எண்கள் அடையாள அட்டைகளில் பதிவிடப்பட்டுள்ளன. கணனி மயப்படுத்தப்படாததாலேயே இத் தவறுகள் நிகழ்ந்துள்ளதாக தெரிவித்த ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர், தவறுகளை நிவர்த்திக்கும் நடவடிக்கைகள் உடனடியாகவே முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

Sunday LEADER

## ஈரானிய எண்ணை இலங்கைக்கு இல்லை

ஈராணுக்கு எதிராக விதித்திருந்த தடைகளிற் சிலவற்றை அமெரிக்கா நீக்கியுள்ள போதிலும் இலங்கை ஈரானிடமிருந்து மசகு எண்ணையை இறக்குமதி செய்யத் தடைகளை எதிர்கொண்டுள்ளது.

Sunday LEADER

## சீன நிறுவனத்திற்காக உள்நாட்டு உற்பத்தியாளர் புறக்கணிப்பு

மீன்புத்தாக்க வலுத்துறைத் திட்டங்களில் உள்நாட்டு முயற்சியாளர்கள் ஈடுபடுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்திவரும் இலங்கை மின்சாரசபை இத் திட்டத்தை ஒட்டு மொத்தமாக சீனக்கம்பனியிடம் கையளிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளது. என தேசிய மின்வழு நுகர்வோர் முன்னணியின் ஆலாசகர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

Sunday LEADER

## "பால்மா ஓர் அத்தியாவசிய உணவல்ல" நுகர்வோர் பாதுகாப்பு சபை

நாட்டில் நிலவும் பால்மா தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத வேளையில் பால்மா ஓர் அத்தியாவசியப் பொருள் அல்ல என தெரிவித்துள்ளது அத்துடன் இவ்வாறு ஏன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை ஆராயப் போவதாகவும் நுகர்வோர் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

Sunday TIMES

## நடைமுறைகளை மீறினாரா அமைச்சர் றிஸாட்

முஸ்லிம்களுக்கு வீட்டுவசதிகளை ஏற்படுத்துவதற்காக நேரடியாக பாகிஸ்தானிய அரசுடன் அமைச்சர் றிஸாட் பதியுதீன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெளிவிவகார நடைமுறைகளுக்கு ஒவ்வாதவை என அரசியல் வட்டாரங்களில் கருத்துக்கள் எழுந்துள்ளன.

இனமொன்றை முன்நிறுத்தி உதவியை வேண்டி நிற்பது அடிப்படை மனித உரிமைகளை மீறுவது என ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

Sunday TIMES

## நத்வா பாலர் பாடசாலையின் சிறுவர் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் - 2013

நத்வா பாலர் பாடசாலையின் 2013ம் ஆண்டுக்கான மாணவ மாணவிகளின் சிறுவர் விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கடந்த 05.01.2014ம் திகதி தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆராதணை மண்டபத்தில் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. விஜயானந்தமூர்த்தி அவர்களும், கௌரவ விருந்தினர்களாக தேசிய காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் டொக்டர். வை.எஸ்.எம். ஷியா, பிரதேச சபை உறுப்பினர் அஷ்ஷெய்ஹ். ஜே.எம். ஜஸ்ரி, ஆசிரியர் வழிகாட்டல் ஆலோசகர் ஜனாப். ஜே. ஜஹுர், சிறப்பு விருந்தினர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியைகள் கலந்து சிறப்பித்தனர்.



## உள்ளத்தில் உள்ள அமைதி

பிரேம் ராவட்



ஒவ்வொருமனிதனின் உள்ளத்தின் உள்ளேயும் அற்புதமான ஆவல் ஒன்று உள்ளது. நம் ஒவ்வொருவரின் உள்ளேயும்,பாலைவனத்தில் உள்ளவித்தொன்று போல அமைதிமலர்வதற்காக காத்திருக்கிறது. அது ஒரு வேறுபாட்டையும் காண்பதில்லை.

நாம் செல்வந்தரோ ஏழையோ என்பதைப் பற்றியோ, நாம் எம் மதத்தைச்சார்ந்தவர்கள் என்றோ, நாம் எந்த நாட்டில் வசிக்கிறோம் என்றோ அது பொருட்படுத்துவதில்லை. அது அக்கறை கொள்வதெல்லாம் தண்ணீரைப் பற்றித்தான்.

வித்துப் போல, தண்ணீர் வரும் நேரம்வரை அதுகாத்துக் கொண்டே இருக்கிறது. எம் உள்ளத்தில், அது காத்துக்கொண்டிருக்கிறது. அதுவிரும்புவது நிறைவைத் தவிரவேறு ஒன்றுமல்ல. நமது வாழ்வில் ஊடுருவும் பிரச்சனைகளால் குழம்பமடையாமல், மீண்டும் ஒரு முறை முழுமையாக இருப்பதை உணரவிரும்புகிறது.

அமைதி ஒவ்வொரு மனிதனிலிருந்தும் ஆரம்பிக்கிறது. அமைதி என்பது ஒவ்வொரு உள்ளத்திலும் அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று. அமைதி என்பது போரில்லாத ஒரு நிலையல்ல.

அமைதிஸ்தாபனங்களுடன் தொடர்புடையதல்ல. போரை ஆரம்பிப்பது மக்கள்தான். அமைதிக்கு மக்கள் மதிப்பு அளித்தால், அப்போது அமைதி நிலவும். நாம் தேடும் அமைதி எமக்குள்ளேயே இருக்கின்றது.

அங்குதான் அதை நாம் கண்டு கொள்வோம். அமைதி ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இருக்கிறது. நமதுவாழ்வில் நமக்கு அமைதி தேவையாயின் அது நிச்சயமாக சாத்தியமான தேயாகும். நாம் அமைதியை உருவாக்கத்தேவையில்லை.

நாம் அது உள்ளேவர அனுமதிக்க வேண்டும். நிறையமக்கள் அமைதியை கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அமைதி ஏற்கெனவே உள்ளது.

அது எல்லாமனிதர்களின் உள்ளத்திலேயும் குடிகொண்டுள்ளது. அது எப்போதும் இருந்தது. எப்போதும் இருக்கும். நம் உள்ளே அளவிட முடியாத அமைதி இருக்கிறது. அளவிட முடியாத ஆனந்தம் இருக்கிறது. இந்த உண்மை பழமையிலும் இல்லை. புதுமையிலும் இல்லை. அது மேலே உள்ள சொர்க்கத்திலும் இல்லை.

ஆனால் அதுநம் உள்ளே உள்ள சொர்க்கத்தில் இருக்கிறது. நல்லது, கெட்டது, நடைபெறப்போகும், நடைபெறமாட்டாத எல்லாமே, நிகழ இருக்கும் போர்கள், உருவாக இருக்கும் அமைதி, இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தாலும்கூட, அது ஒருமனிதனின் உயிர் வாழ்வை விடமுக்கியத்துவத்தில் குறைந்ததே ஆகும்.

இது நமது நேரம். இது உயிரோடு இருப்பதற்கான நமது வாய்ப்பு. இந்த மூச்சு எல்லோருக்குள்ளேயும் வருகிறது.மிகமெதுவாகவும், மிக அமைதியாகவும், ஒருசெய்தியை அறை கூவுகிறது. மிகபலமாகவும் தெளிவாகவும் கூறுகிறது.

அந்த செய்தி என்ன? இத்தருணத்திலேயே, இப்போதே உங்கள் வாழ்வில் நிறைவடையுங்கள், இப்போதே உங்கள் வாழ்வில் ஆனந்தத்தை கண்டு கொள்ளுங்கள், அமைதியை கண்டு கொள்ளுங்கள் என்பதுதான்அந்தச் செய்தி யாகும்.

'நான் என்ன செய்ய வேண்டும்?' எனப் பலர் கேட்கின்றார்கள். இது ஏதோ ஒன்றைச் செய்யும் செயல் முறைஅல்ல. செய்தவற்றை அகற்றும் செயல் முறை ஆகும். ஏற்கனவே நாம் கற்றுக் கொண்டகருத்துகளை அகற்றும் செயல்முறை ஆகும். நாம் என்ன செய்ய வேண்டும் என்பதல்ல கேள்வி. விஷயங்களை அகற்றுவதுதான் நடைபெற வேண்டும்.

அது எவ்வாறான செயல் முறை? ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். மிகவும் அழகான ஒரு ஓவியம் தீட்டப்பட்டிருக்கின்றது,ஆனால் ஒரு வரும் அதனைப் புரிந்து கொள்ள வில்லை என்பதைப் போன்றதாகும். மக்கள் வந்து அந்த ஓவியத்தின் மேல் பல வர்ணங்களைப் பூசினார்கள்.

அதன் மேல் மேலும் வர்ணங்களைப் பூசியபின், தமது சொந்த ஓவியங்களை வரைந்தார்கள். அதில் மென்மேலும் பல ஓவியங்களை வரைந்தார்கள். இப்பொழுது அந்தப் படத்தில் உள்ள வர்ணங்களை, நாம் மெதுவாக அகற்றத் தொடங்கும் போது, அங்கு நாம் காண்பது, நமக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கும்.

ஏனெனில் அது போன்ற ஒரு அற்புதமான ஓவியம் ஒருபோது மேதீட்டப் படவில்லை. அது தான் நாம். நாம் தான் அந்தபொக்கிஷப் பெட்டகம். இது ஏறத்தாழ ஒரு சிற்பியின் வேலையைப் போன்றது. கற்பாறையின் உள்ளே ஒரு சிலைவடிவம் உள்ளது.

ஒரு சிற்பிக்கு அது தெரியும். அவன் தேவையற்ற பகுதிகளை அகற்றுவதன் மூலம் அந்தசிற்பத்தை வெளிக் கொணர்கின்றான். தேவையற்ற பகுதிகள் அகற்றப்படும் பொழுது ஒரு அழகான, அற்புதமான சிற்பம் தோன்றுகின்றது. இயல்பாகவே ஒரு கற்பாறை கடினமான தோற்றம் உடையது.

ஆனால் இந்தச் சிலையோ அழகாகவும், மென்மையாகவும் இருக்க முடியும். என் வாழ்விலும் இதற்கு இணையான ஒரு தன்மையை நான் காண்கின்றேன். இது புதிதாக ஒன்றை உருவாக்குவது பற்றியது அல்ல, மாறாகஎனக்கு தேவைப்படாத, மற்றைய விஷயங்களை அகற்றுவதைப் பற்றியது.

இந்த வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குத் தடையாக உள்ள விஷயங்களை அகற்று வதைப் பற்றியது. இது அந்த விஷயங்களுடன் போராடுவதைப் பற்றியது அல்ல. வெற்றி தோல்வி என் பதைப் பற்றியது அல்ல.

இது அந்தச் சிற்பத்தை வெளிப் படுத்துவது பற்றியது. என் உள்ளே உள்ளசாந்தம், ஆழ்ந்த அமைதி என்பவற்றை வெளிக் கொணர்வதைப் பற்றியது. எனக்கு அது வேண்டும், இது தேவை, எனக்கு இது நிட்சயமாக தேவைஎனப் பலவிஷயங்களைநான் ஆசைப்படலாம்.

ஆயினும் எனக்கு எது தரப்பட்டுள்ளதோ அது தான் தரப்பட்டிருக்கிறது. இது கண்டு கொள்வதைப் பற்றியபயணம். உருவாக்குவதைப் பற்றியது அல்ல. நம்மிடமுள்ள வெறுமை அகலும் பொழுது, நம்மிடம் எல்லாமே இருக்கிறது.

குறை ஒன்றுமே இருக்காது. இன்னொரு விதமான நிரம்புதல் ஏற்படத் தொடங்குகின்றது. இதுசாந்தத்தை உணரும் நிலையாகும்.

இதுதான் ஆழ்ந்த அமைதியில் இருக்கும் உணர்வு. அங்கு இரு தன்மை இல்லை. ஒரே நிலைதான் உள்ளது. இந்தத்தருணம் தான் எல்லாமாக உள்ளது. எடை போடுவதற்கு அங்கு எதுவுமே இல்லை. அங்கேகோபம் இல்லை. சந்தேகங்களும் இல்லை.உள்ளம் நிரம்பி இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு முதல்வரின் ஒற்றையாட்சி எதிர்ப்பு

யாழ்ப்பாணத்தில் சில நாட்களுக்கு முன்னர் நடந்த சிறுவர் மாதிரிக் கிராமத் திறப்பு விழாவில், முதல் முறையாக வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், மத்திய அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தார்.

அங்கு அவர் வெளியிட்ட கருத்து குறித்து சிங்களத் தேசியவாதிகளால் திரிவுபடுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் தனது உரையில் முதலில் மாகாணசபைகளின் அதிகாரங் களை விரிவுபடுத்த வேண்டும் என்றும், ஒற்றையாட்சி முறையைக் கைவிடும் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற அரசாங்கம் கூறிவரும் கருத்தை நிராகரிக்கும் வகையில் அவரது கருத்து அமைந்திருந்தது. ஒரே தேசம் ஒரே மக்கள் என்றெல்லாம் மேடைக்கு மேடை கூக்குரல் எழுப்புவதில் பயனில்லை.

ஏனென்றால் இது ஒரே தேசமாக இருக்கும் அதே நேரத்தில், வெவ்வேறு பின்புலங்களைக் கொண்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஒரே நாட்டில் வாழ்வதால் நாங்கள் ஒரே மக்களாகிவிட முடியாது.

நாம் யாவரும் ஒரு நாட்டு மக்களே என்று பெருவாரியான பெரும்பான்மையின மக்கள் கூறும் போது, இது சிங்கள பௌத்த நாடு, எல்லோரும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டின் கீழடங்கிய இந் நாட்டின் குடிமக்களே என்ற அடிப்படை எண்ணத்தில் தான் தமது கருத்தை வெளியிடுகின்றார்கள்.

இது தவறு என்று அவர்கள் எண்ணுவதில்லை என்று அதற்கு விளக்கமும் கொடுத்திருந்தார்.

ஆனால், அரசியலமைப்பை மாற்றி ஒற்றையாட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டதை, சிங்கள பௌத்த தேசியவாத அமைப்புகள் சில அவர் நாட்டைப் பிரிக்க முனைவதாக அர்த்தம் கற்பிக்க முனைந்துள்ளன.

இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற பின்னர், இந்தளவுக்கு மோசமான நிலைக்குப் பின்தள்ளப் பட்டதற்கு, இதுபோன்ற தவறான புரிதல்களோ அல்லது திரிபுபடுத்தல்களோ தான் முக்கியமான காரணம்.

சிங்கள மக்களிடத்தில் தமிழர்களுக்கு எதிரான கருத்தை விதைப்பதன் மூலம், அரசியல் ஆதாயம் தேடுகின்ற பண்பு, கொழும்பு அரசியலில் புதியதொன்று அல்ல.

விடுதலைப் புலிகள் இயக்கம் பலமாக இருந்தவரை, இதுபோன்ற மோசமான கருத்துகளை விதைப்பது சிங்களத் தேசியவாத சக்திகளுக்கு மிகவும் இலகுவானதாகவும் இருந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், புலிகளை வைத்து நடத்தப்பட்ட இனவாத அரசியல் முடிவுக்கு வந்து விடும் என்று சில தரப்பினர் எதிர்பார்த்த போதிலும், அது தவறான கணிப்பாகவே இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறது.

அதற்கு ஓர் உதாரணம் தான், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் ஒற்றையாட்சிக்கு எதிரான கருத்து, பிரிவினைக்கு ஆதரவான கருத்தாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

உலகில் ஒற்றையாட்சி முறை, சமஸ்டி ஆட்சிமுறை, மன்னராட்சி முறை என்று பல்வேறு விதமான ஆட்சி முறைகள் உள்ளன.

இதில் ஒற்றையாட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதே வடக்கு மாகாண முதல்வரின் கருத்தாக இருந்தது.



ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டு, சமஸ்டி ஆட்சிமுறை உருவாக்கப்பட்டால், தனிநாட்டை இலகுவாக உருவாக்கி விடலாம் என்று திட்டம் போடுகிறார் முதல்வர் விக்னேஸ்வரன் என்ற சிங்களத் தேசியவாதிகளின் கருத்து, சாதாரண சிங்கள மக்களிடத்தில் தவறான சமிக்ஞைகளையே காண்பிக்கும்.

சமஸ்டி ஆட்சிமுறையைக் கோருவதை அரசாங்கமும் சரி, பெரும்பாலான சிங்கள கட்சிகள் மற்றும் தலைவர்களும் சரி, ஏதோ ஒரு பெரிய குற்றம்போலவே பார்க்கின்ற நிலை உள்ளது.

ஒற்றையாட்சி நிர்வாக அலகு, தனது எல்லா மக்களுக்கும் சமமான உரிமைகளையும் வசதிகளையும் செய்யத் தவறும் போது தான் இந்த மாற்று ஆட்சிமுறை பற்றிய கோரிக்கைகள் எழுந்துள்ளன.

மத்தியில் ஒன்று குவிக்கப் பட்டுள்ள அதிகாரங்களை, எல்லா சமூகங்களுக்கும் எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தப்படாத நிலை ஒன்றின் போது தான், மக்களுக்கு ஒற்றையாட்சி மீதான சலிப்பும், வெறுப்பும் ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கையின் ஒற்றையாட்சி நிர்வாக அமைப்பு சிறுபான்மையின மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

அதற்குக் காரணம், இன ரீதியான அடக்குமுறைகளும் உரிமை மறுப்புகளும் தான். அதுவே ஒரு பெரும் போருக்கான காரணியாகவும் அமைந்தது.

அந்தப் போர் இன்னமும் மாறாத பெரும் வடுக்களுடன் முடிந்து போனாலும், [illegible] உருவாக்கிய [illegible] இன்னமும் வலுவாக கோலோச்சுகிறது.

இந்த ஒற்றையாட்சி கோட்பாடு மீண்டும் சிறுபான்மையின மக்களிடையே ஏமாற்றத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் ஒன்றாகவே மாறியுள்ளது.

இத்தகைய சூழலில், மாற்று ஆட்சி முறை ஒன்றின் ஊடாக, எல்லா இனங்களையும், மதங்களையும், சமூகங்களையும் ஒன்றிணைப்பது குறித்து ஆலோசிப்பதே பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், ஒற்றையாட்சியை வலுப்படுத்த நினைத்த அரசாங்கம், அதனை சாதகமான முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்தால், மாற்று ஆட்சிமுறை ஒன்றை உருவாக்குவது பற்றிக் கூற வேண்டிய நிலை வடக்கு மாகாண முதல்வருக்கு ஏற்பட்டிருக்காது.

வடக்கு மாகாண முதல்வராகப் பதவியேற்று மூன்று மாதங்களேயான நிலையிலும், பெரிதாக எதையும் செய்ய முடியாத நிலையில் தான் அவர் முதல்வராக நீடிக்கிறார்.

எனவே மற்றெல்லோரையும் விட, ஒற்றையாட்சியின் குறைபாடுகளை அவரே நன்கறிந்தவராக இருக்க முடியும்.

ஒற்றையாட்சி முறையைத் தமது பலமாக எண்ணிக் கொண்டிருக்கிற சிங்களத் தேசியவாத சக்திகளுக்கு, அதுவே பெரும் பலவீனம் என்பதை ஒரு பெரும் போருக்குப் பின்னரும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஒற்றையாட்சியின் மீதான ஒரு பகுதி மக்களின் அவநம்பிக்கை, ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கோட்பாட்டை ஒருபோதும் வலுப்படுத்தாது என்பதை அவர்களோ அரசாங்கமோ புரிந்து கொள்ளவில்லை.

வெளிநாடுகளின் நிர்ப்பந்தங்களினால் வடக்கு மாகாணசபையை உருவாக்க இணங்கிய அரசாங்கம், 13ஆவது திருத்தச்சட்டம் வழங்கியுள்ள அதற்குரிய அதிகாரங்களை பயன்படுத்த இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்து, எல்லா இனமக்களும் உரிமைகளை அனுபவிக்கின்ற சூழல் ஒன்றை உருவாக்கியிருந்தால், அரசாங்கத்துக்கு இப்போதுள்ள பல நெருக்கடிகள் எப்போதோ தீர்ந்திருக்கும்.

ஆனால், அரசாங்கம் அவ்வாறு செய்யத் தயாராகவும் இருக்கவில்லை.

அவ்வாறு அதிகாரங்களைப் பகிர அரசாங்கத்தை அனுமதிக்க, சிங்களத் தேசியவாத சக்திகளும் தயாராக இருக்கவில்லை. இதன் காரணமாகவே, ஒற்றையாட்சி மீதான தமிழர்களின் வெறுப்பு இன்னும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

சமஸ்டி ஆட்சிமுறை மூலமே தாமும் சமமாக மதிக்கப்படும் நிலையை உருவாக்க முடியும் என்ற கருத்தே பெரும்பாலான தமிழர்களிடம் உள்ளது.

இந்தநிலையில், ஒற்றையாட்சி முறையை ஒழித்து, புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றும் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஈடானது அல்ல. அதேவேளை, தனிநாடு தான் வேண்டும் என்று இன்னமும் ஒற்றைக்காலில் நிற்கின்ற அளவுக்கு தமிழர்கள் முட்டாள்களுமல்ல.

நீண்டதொரு போரையும், பேரழிவுகளையும் சந்தித்த ஓர் இனம், அதற்குள் தனிநாடு கோரிப் போராடுகின்ற அளவுக்கோ, அதைப் போய் அரசாங்கத்திடம் கோருகின்ற அளவுக்கோ இல்லை.

அது அரசாங்கத்துக்கும் சரி, சிங்களத் தேசியவாத சக்திகளுக்கும் சரி நன்றாகவே தெரியும்.

ஆனாலும், தமிழர்கள் நாட்டைப் பிரிக்க முனைவதாக கூறிக் கொண்டு, ஒற்றையாட்சியை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்குமேயானால், அது அரசியலமைப்பு மாற்றம், சமஸ்டி ஆட்சிமுறைக்கான கோரிக்கைகளைத் தான் இன்னும் இன்னும் பலப்படுத்தும்.

**கே. சஞ்சயன்**

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்




மத்ஸ்யகேஸ்வரம் என்னும் மச்சகேஸ்வரம் மகாவி'ணுவின் மச்ச அவதாரம் தொடர்பான ஒரு புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தஷிணைகைலாசப் புராணத்தின் மச்சாவதாரப் படலம் திருமால் மீனாக அவதாரமெடுத்து உலகினைக் காத்தபின் மீண்டும் திருமால் உருவெடுத்தது தீணகைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணேஸ்வரத்திலேயே என்ற செய்தியைச் சொல்கிறது.

திருகோணமலை வரலாற்றில் முதன்மையான சாசனமாகக் கருதப்படும் நிலாவெளித் தானசாசனம் மத்ஸ்யகேஸ்வரத்திற்கு வழங்கப்பட்ட தானம் தொடர்பான தகவல்களைத் தருவதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். எனவே மானாங்கேணி , நிலாவெளிச் சாசனங்கள் எழுதப்பட்ட காலப் பகுதிகளில் திருக்கோணேஸ்வரத்தின் மறுபெயர்களில் ஒன்றான மத்ஸ்ய கேஸ்வரம் என்ற பெயரே மிகுதியாக இப்பிரதேசத்தில் வழக்கில் இருந்திருக்கிறது எனலாம்.

இம்மானாங்கேணிச் சாசனம் சோழ உயர் அதிகாரிகளில் ஒருவனான மூவேந்த வேளாண் என்னும் பட்டம் பெற்ற இராஜேந்திர வளநாட்டு கணபதி என்பவனால் மத்ஸ்யகேஸ்வரத்து மூலஸ்தானம் தொடர்பாகவும் மற்றுமொரு ஈஸ்வரம் தொடர்பாகவும் செய்யப்பட்ட ஒரு ஏற்பாட்டினைப் பதிவு செய்துள்ளது. இங்கு குறிப்பிடப்படும் ஈஸ்வரம் எது என்று தெரியவில்லை. எனினும் முன்னர் நாம் பார்த்த மானாங்கேணியில் கிடைத்த புராதானச் சின்னங்களான மகாவிஷ்ணு,பார்வதி.ஆவுடையார், நந்தி என்பனவற்றை இச்சாசனத்தில் குறிப்பி டப்ளுபடும் ஈஸ்வரத்தின் பகுதிகளாகக் கருத இடமுண்டு.

இத்தனை வரலாற்றா தாரங்களைக் கொண்ட மானாங்கேணிக் கல்வெட்டும், புராதானச் சின்னங்களான நந்தியும்,ஆவுடையாரும் சுமார் 1000 வருடங்களுக்குப் பிறகும் நாம் இலகுவில் காணக்கூடியதாக திருகோணமலை நகரமத்தியில் அமைந்திருக்கும் வெள்ளை வில்வபத்திர கோணநாயகர் ஆலயத்தில் இன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இனி திருகோணமலையில் காணப்படும் சோழர்களின் மெய்க்கீர்த்திகள் பற்றிப் பார்ப்போம். மெய்க்கீர்த்தி என்பதன் பொருள் உண்மையான புகழுக்குரிய செயல்களைக் கூறும் கல்வெட்டு என்பதாகும்.

பாண்டியரும், பல்லவரும் பிறருக்குத் தானங்களை வழங்கிய பொழுது அவற்றைச் செப்பேடுகளில் பொறித்து வைத்திருந்தனர். எனினும் அக்கல்வெட்டுக்களுக்கு மெய்க்கீர்த்தி எனப்பெயரிட்டு, அச்செப்பேடுகளில் தம் முன்னோர் வரலாறுகளை முதலில் எழுதுவித்து ஒருபுரட்சிகரமான மாற்றத்தை, அறிவியல் பூர்வமான அணுகுமுறையை முதன்முதலில் செய்த பேரரசன் முதலாம் இராசராசனே ஆவான். இவருக்குப் பிறகு இவர் வழி வந்த சோழ மன்னர்கள் அனைவரும் இந்தப் பழக்கத்தைப் பின்பற்றினர்....

சோழர் கல்வெட்டுக்களில் காணப்படும் வரலாற்று முன்னுரைகள், ஒவ்வொரு மன்னனுடைய ஆட்சிக் காலத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறியவும், கல்வெட்டுகள் எந்தெந்த மன்னர்களுடையவை என்பதை அறியவும் பெரிதும் உதவுகின்றன.

(தொடரும்)

-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-

## எத்தனை காலம் தான்......?

அன்றையத்தினம் நத்தார் தினத்திற்கு முன்றைய தினம் அதாவது மார்கழி 24ந்திகதி மறுநாள் பெருநாள் தினமென்பதால் தனது பேரக் குழந்தைகளுக்கு பிஸ்கட், கேக் போன்ற தீன்பண்டங்களை வேண்டுவதற்காக இரவு பத்துமணிபோல் சந்தியிலுள்ள கடையொன்றுக்கு சென்றிருந்தார் அந்தப் பெரியவர்.

அவர் அரசாங்க சேவையில் ஓய்வு பெற்றவர் மாத்திரமல்ல அப்பகுதி சமாதான நீதிவானுமாவார்.அவருக்குள்ள விசேட திறமைகள் காரணமாக அவரினது பதவிகளை எவரும் மனதில் ஞாபமாக வைத்திருக்க இயலவில்லை. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்ல பாண்டியத்தியம் பெற்றுள்ளதால் சத்தியப்பிரமாணம் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் பதவிளை நீதி அமைச்சு அவருக்கு வழங்கியிருந்தது.

மும் மொழிகளிலும் பேச, எழுத வாசிக்க தெரிந்தவர் என்பதனால் உரை மொழி பெயர்ப்பாளர் எனும் பதவியும் அவருக்குண்டு. அது மாத்திரமில்ல அவர் ஓர் ஊடகவியலாளரும் கூட அவ்விதமான தகமைகள் அனைத்தையும் அவர் கொண்டுள்ளதால் பிரதேசத்தில் அவர் ஓர் செல்வாக்குமிக்கவராகவும் பொது மக்களால் கணிக்கப்பட்டார். எவருக்கும் உதவி செய்வதில் அவர் என்றுமே பின் நிற்காத சேவை மனப்பாங்கு கொண்டவர்.

அப்படிப்பட்டவர்களை பலரும் ஏற்று கௌரவித்தாலும் ஒரு சிலருக்கு ஏனோ அவ்விதமானவர்களை கண்டால் தாங்க முடியாத பொறாமை உச்சியில் ஏறிவிடும். வீணாக அவர்களை வம்புக்கு இழுபடபார்கள் அதுமாத்திரமல்ல எப்படியும் மக்கள் மத்தியில் கேவலப்படுத்த வேண்டும்மென்ற நோக்கில் இல்லாத, பொல்லாதவைகளை கூறி அவமானப் படுத்த முயற்சிப்பார்கள்.

எப்படியும் அந்தப்பெயரியவரை அன்றையத்தினம் அவமானப்படுத்துவதற்கென்றே குடிப்போதையில் இருந்த ஒருவன் காத்துக் கொண்டே இருந்தான். அது அவருக்கு தெரியவில்லை மேலும் எவருடனும் அவர் அன்பாக பழகக் கூடிய ஒருவர். அன்று தனது பேரப்பிள்ளைகலுக்கு பெருநாளை முன்னிட்டு தீன்பண்ட ங்களை வேண்டிவிட்டு சந்திக் கடையிலிருந்து புறப்படவிருந்த அப்பெரியவரின் காதால் அவரைப் பற்றிய அசிங்கமான, இவதூறான, வார் த்தைகள் கேட்கக்கூடியதாக இருந்தது.

மேலும் சமூகத்தில் நல்ல அந்தஸ்த்தில் இருப்பதால் அவர் எதற்கும் பதட்டப்படாமல் அந்த வார்த்தைகளை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்த அக் குடிகாரனின் அருகில் சென்று நீயாரப்பா? நீ ஏன் என்னை அவமதிக்கிறாய்? நான் உனக்கு என்ன செய்தனான்? என்று கேள்வி ஆமல் கேள்வி கேட்டுக்கொண்டே சென்றார்?

ஆனால் அவரின் கேள்விகலுக்கு அவனால் பதில் அளிக்கமுடியாது மீண்டும், மீண்டும் கெட்டவார்த்தைகளை கடைக்காரர், பொதுமக்கள் முன்னிலையில் பிரயோகித்துக் கொண்டே சென்றான். "இவர் ஊருக்குத்தான் பெரிய மனிஷன் செய்கிற வேலைகள் எல்லாம் கீழ்த்தரமானது வீட்டுக்கு கள்ளக் கரண்ட் பாவிக்கிறார்" என்று வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே சென்றான்.

அப்பெரியவருக்கு அப்பொழுது புரிந்து விட்டது. அவன் யாரென்று அவன் அப்பகுதி மின்சார சபையில் ஓர் ஊழியன் சில வாடிக்கையாளார்களின் வீடுகலுக்கு இவனே திருட்டு மின் சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு சூசமாக தொழிநுட்ப வேலைகளை செய்து கொடுத்து கப்பம் வேண்டுவது வழமை.

அது மாத்திரமல்ல சில வீடுகளுக்கு மின்மாணி இல்லாமல் பிரதான மின் இணைப்பில் இருந்து நேரடியாக மின்சார்தை பெற்றுக்கொடுப்பதில் அவன் வல்லவன். அவ்விதம் திருட்டு மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பில் அவன் வல்லவன். அவ்விதம் திருட்டு மின்சாரத்தை கொடுத்து விட்டு மாதா மாதம் மின்சாரக் கட்டணத்தை அவனே வீடுவீடாக சென்று வசூலிப்பான். மின்சார சபை அறவிடும் கட்டணத்தை விட அது மிகவும் குறைந்த தொகை என்பதால் அவனின் உதவியை எவரும் நாடுவார்.

அதுமாத்திரமல்ல தனக்கு பணத்தட்டுப்பாடு வரும் நேரத்தில் அவ்வப்போது அவ்விதமானவர்களிடம் இருந்து பணத்தை சுரண்டுவதற்கும் அவன் தவறுவதில்லை. யாராவது அவனுக்கு பணம் கொடுக்க மறுத்தால் கதி அதோ கதிதான்.

அவ்விதம் பணம்கொடுக்க மறுத்த பலர் திருட்டு மின்சாரம் பெற்றதன் அடிப்படையில் நீதிமன்றத்தால் விடுக்க[illegible] த்தை செலுத்[illegible] தப்பித்துமுள்ளனர். திருட்டு மின்சாரம் தொடர்பாக இரகசிய தகவல் கொடுப்பவனும் அவனே.

பலரை அப்பகுதியில் ஏமாற்றுவது மாத்திரமல்ல அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பதில் அவன் பெரும் கில்லாடி சிலரிடம் பணத்திற்கு பதிலாக மது போன்றவற்றைகப்பமாகப் பெறுவான். அவனை அனுகாமல் திருட்டு மின்சாரம் யாரும் பெற்றால் அவர்கலுக்கு எதிராக எவ்வித புகாரும் செய்யாமல் அவர்களை அடிக்கடி மிரட்டி பணம் அல்லது தனக்கு தேவையானவைகளை பெற்றுவருவது அவனது வழமையான செயலாகும். குள்ளத்தனத்திற்கும் மிகவும் பெயர் போனவன்.

அவ்விதமான அச்சுறுத்தலொன்றையே அன்று இரவு கடைக்கு வந்திருந்த அப்பெரியவரிடம் அவன் விடுத்திருந்தான். ஆனால் பெரியவர் அவனின் அச்சுறுத்தலுக்கு அடிபணியவோ பயப்படவோ, இல்லை காரணம் அவர் தனது வீட்டுக்கு நேர்மையான முறையிலே மின்சாரத்தை பெற்றுவருபவர்.

எப்படியும் பொதுமக்கள் மத்தியில் அவ்விதம் ஒரு புரளியை கிழப்பி விட்டால் அப்பெரியவர் பயந்து தனக்கு யாதும் மாதாந்த கப்பம் தருவார் என அவன் தவறாக கதைக்குப் போட்டிருந்தான். மேலும் அவனைப் பார்த்து அவர் இவ்வாறு சுறினார் திருட்டு மின்சாரம் பெறுபவர்கலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நீயார்? அதை பார்க்க மின்சார சபை அதிகாரிகள் இருக்கிறார்கள் உனது வேலை கிடங்கைத் தோண்டி மின்சார கம்பம் நாட்டுவது மட்டுமே அந்த வேலையை மட்டும் நீ ஒழுங்காகப் பார்த்தால் போதும் நீ மின்சார சபையில் ஒரு கூலி ஆள் என்பதை மட்டும் எப்பொழுதும் மனதில் வைத்துகொள் என்று பொதுமக்கள் மத்தியில் கடுமையாக அவனை எச்சரித்து விட்டுச் சென்றார் அப்பெரியவர்.

ஆனால் பொதுமக்கலுக்கு தெரியும் பெரியவர் மிகவும் நேர்மையானவர். அங்கு குடிபோதையில் இருந்தவன் பெயவரை மிரட்டி பணம் பறிப்பதற்கே அப்படியொரு நாடகத்தை அரங்கேற்றினால் என்பதையும் அவர்கள் தெளிவாக புரிந்து கொண்டனர்.

பெரியவர் அவ்விடத்தை விட்டு சென்றதும் அவனும் மெதுவாக அங்கு இருந்து நகன்றான். அடுத்தநாள் நத்தார் தினமென்பதால் விசத்தை பெரிதுபடுத்த அப்பெரியவர் விரும்ப வில்லை. பெரியவர் அன்றும் கையை ஓங்கி இருந்தால் ஊரிடமிருந்து குடிபோதையிலிருந்தவனுக்கு நல்ல அபிஷேகம் இடம் பெற்றிருக்கும். எப்படியோ தப்பினேன், பிழைத்தேன் என்று அவன் அங்கு இருந்து சென்று விட்டான்.

இருப்பினும் பெரியவரின் மனம் நின்மதியடையவில்லை காவல்துறையின் 119 எண்ணுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் அவன் அன்று முழு நாலும் கம்பி எண்ண நேர்ந்திருக்கும் பெரியவர் அப்படி யொன்றை செய்ய முன்வராததால் அவன் தப்பித்துக் கொண்டான் ஆனால் பெரியவர் அன்று ஒரு வேலையை மட்டும் செய்திருந்தார்.

அதாவது நடந்த சம்பவத்தை அன்று இரவே மின்சார சபை அலுவலகத்திற்கு . ரியப் படுத்தியிருந்தார். ஏற்கனவே அவனின் மேல் கடுப்பாக இருந்த ஊழியர்கள் சபையின் உயர் அதிகாரியின் காதில் விசயத்தை கோட்டனர்.

"உண்மையில் அவன் மிகவும் மோசமானவன் அவனை எப்படியும் இங்கு இருந்து வேறு பிரதேசத்திற்கு இடமாற்ற நான் எண்ணியிருந்தேன். ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக அவனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போய் விட்டது. இப்படியொரு சம்பவம் இடம்பெற்றது மிகவும் நல்லதே உங்களுடன் தகலாறு பண்ணியதைவிட இன்னுமொரு சம்பவம் அவனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு எனக்கு இலகுவாக உள்ளது." என உயர் அதிகாரி அப்பெரியவருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தார். அதுமாத்திரமல்ல எழுத்து மூல முறைப்பாட்டையும் கோரியிருந்தார்.

மேலும் பெரியவருக்கு உயர் அதிகாரி சுட்டிக்காட்டிய அச்சபவம் என்வெனில் அன்று அவன் தனது கடமை நேரத்தில் குறிப்பிட்ட நிலையத்திலிருந்து

## ...நாட்டு நடப்பு...

எவ்வித அனுமதியும் இன்றி சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள அக்கடைக்கு சென்றதும், சமூகத்தில் உயர் அந்தஸ்த்திலுள்ளவரோடு வீண் தகராறை ஏற்படுத்திக் கொண்டதும், அவனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருந்தது.

தீயவைகள் என்றுமே நிலைத்து நிற்பதில்லை அவ்வாறா தீயவர்கலும் நீண்டகாலம் நிலைத்து நிற்பதில்லை குறுகியகால குதுாகலத்திற்காக கூத்தாடி, கும்மாளம், போடுபவர்களுக்கு அப்பெரியர் போன்று துணிந்து செயல் படுபவர்கள் இன்றைய சமூகத்திற்கு மிகவும் தேவையனவர்களே.

-பாலையூற்றான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புக்குள் மறைந்து போன காதல்

சிறுகதை

அந்த நாட்களை நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஏதோ ஒரு இன்பம் அவள் மனதை கொவ்விக் கொள்கின்றது.

மறைந்து போன நாட்கள் அவள் கண் முன்னே நடமாடுகின்றது. தித்திப்பான நினைவு, திகட்ட வைக்கும் சொப்பமான காலம் அது. மீண்டும் வாராதோ அந்த நாட்கள் என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது.

கமலை பற்றிய நினைவுகளை மனதில் சுமந்துக் கொண்டே அவளது நாட்களை கழித்து வருகின்றாள்.

ஒரு பின் தங்கிய பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த ஹாருணிக்கு அப்படி ஒரு வாழ்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

தனது கிராமத்தில் இருந்த சிறிய பாடசாலையில் படித்தாள் ஹாருணி. உயர்தரம் படிப்பாள் என்று எதிர்பார்க வில்லை அத்தோடு தனது சகோதரர் களை பிரிந்து நகரம் சென்று விடுதியில் தங்கி படிக்க நேரிடும் என்றும் ஹாருணி அப்போது நினைக்கவில்லை.

ஹாருணி உயர்தர படிப்புக்காக பெற்றோரையும் உறவுகளையும் பிரிந்து சென்று விடுதியில் தங்கினாள்.

விடுதியில் தங்கி இருந்தவர்கள் இவளை ஒரு பட்டிக்காட்டில் இருந்து வந்தவள் என்று தீண்டத்தகாதவள் போல வெறுத்து ஒதுகினர்.

அந்த ஓரிரு நாட்கள் அவள் தனிமையை உணர்ந்தாள். மறுநாள் பாடசாலை சென்றாள் அங்கும் ஹாருணியை மாணவர்கள் புறக்கணிக்கவே செய்தனர்.

ஹாருணியின் மனதில் அச்சம் குடி கொண்டது. அவள் மனதில் ஆயிரம் வினாக்கள் விடையறியாது விக்கி தவித்தன.

கிராம புறத்திலிருந்து வந்தால் என்ன? நானும் படிக்கத் தானே வந்தேன். ஏன் என்னை மட்டும் வெறுத்து ஒதுக்குகின்றனர்.

கிராம புற பிள்ளைகள் படித்து முன்னேறக் கூடாத? என்ன? ஏற்றத் தாழ்வுகள் அதிகம் காட்டும் சமுதாயம் இது இங்கு நான் எப்படி படிப்பேன்.

அவள் மனதில் ஊவலாடியது. ஆசிரியர்கள் நல்லவர்கள் தான் மாணவர்களிடையே புரிந்துணர்வு கிடையாது.

இந்தச் சூழலில் இருந்து எப்படியாவது விலகிவிட வேண்டும் என்று ஹாருணியின் மனம் புலம்பியது.

அன்றும் அப்படித்தான் அச்ச மிகுதியோடு பாடசாலையில் அடியெடுத்து வைத்தாள் ஹாருணி. அங்கு ஒரு புதிய முகம் இவள் வருகை க்காக



காத்திருந்தது.

அவன் பெயர் கமல் நகரத்தில் வளர்ந்திருந்தாலும் மற்றவர்களின் மனதை புரிந்து கொள்ளும் தன்மை கொண்டவன்.

அன்பானவன் தன்னைப் போல மற்றவரும் வாழ வேண்டும் என்ற பரந்த குணமுடையவன்.

ஹாருணியை கண்டவுடன் ஒரு புன் முறுவல் புரிந்தான். ஹாருணிக்கு எதுவும் புரியவில்லை அவள் நேராக வகுப்பறைக்கு செல்ல தயாரானாள்.

ஹாருணி கொஞ்சம் நில்லுங்க. உங்களிடம் பேச வேண்டும என்றான் கமல். ஹாருணிக்கு அச்சத்தால் உடல் நடுங்கியது. மனம் பதறியது என்ன பேச வேண்டும் என்று தயக்கத்துடன் கேட்டாள்.

ஹாருணி இந்த பாடசாலையில் நடக்கின்ற விடயங்களை நான் அவதானித்து இருக்கின்றேன்.

உங்களிடம் மற்றவர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்த்தேன். எனக்கு மிகவும் கவலையாக உள்ளது.

ஹாருணி கல்வி கற்பதற்கு இப்படியான ஏற்றத் தாழ்வுகள் வறத்தான் வெய்யும்.

இதையெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். நான் உங்களுக்கு எந்த விதமான உதவி வேண்டும் என்றாலும் செய்ய தயராக இருக்கின்றேன்.

என்று கூறி விட்டு போனான் கமல். கமல் போன பாதையை பார்த்துக் கொண்டு இருந்தாள் ஹாருணி இப்படி ஒரு பாடசாலையில் இப்படி ஒரு நல்ல மனிதனா என்று.

அடுத்த நாள் கமலை சந்தித்து ஹாருணி பல உதவிகளை பெற்றுக் கொண்டாள்.

இப்படியாக அவள் அதிக நேரம் கமலுடன் நேரத்தை செலவிட்டால் கமல் ஹாருணிக்கு படிப்பதற்கான உதவிகளை செய்து கொடுத்தான்.

இருவருக்கிடையே புதியதொரு நட்பு உருவாகியது. ஏனைய மாணவர்களுக்கு இவர்கள் இருவரையும் பார்த்து பொறாமை கொண்டனர்.

ஹாருணி நன்றாக படித்தாள். அதிபர் ஆசிரியர்களிடம் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்றாள் ஹாருணி.

மாணவர்களிடையே போட்டியும் பொறாமையும் அதிகமாகவே காணப்பட்டது.

கிராமத்தில் இருந்து வந்தவள் நன்றாக படிக்கின்றாளே என்ற எரிச்சல் சில பேரிடம் இருந்தது.

ஆனால் இதை எல்லம் ஹாருணி பொருட்படுத்தாமல் தனது கவனத்தை படிப்பில் செலுத்தினாள்.

ஹாருணி யோடு சேர்ந்து கமல் முன்னரைவிட நன்றாக படித்தான். இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாக புரிந்து கொணடனர்.

விட்டுக் கொடுக்கும் பண்பும் அதிகமாகவே இருவரிடமும் காணப்பட்டது.

இருப்பினும் தங்களது நட்பு மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்பதற்காக தங்கள் மனதுக்குள் வந்த காதலை நட்புக்குள் மறைத்துக் கொண்டனர் இருவரும்.

அன்பும் காதலும் அதிகம் இருந்தாலும் அதை வெளிப்படுத்த முடியாதவளாய் விக்கித் தவித்தாள் ஹாருணி.

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியது. இருவரும் கலை பீடத்தில் முன் நிலை பெற்றனர்.

பல்கலைக்கழக வாய்ப்பு இருவரு க்குமே கிடைத்தது. இவர்கள் வழமையாக சந்திக்கும் பாடசாலை இருவரின் வரவுக்காக காத்திருந்தது.

இருவரும் அதிபர், ஆசிரியர்கள் தாம் கற்ற பாடசாலைக்கு விடை கொடுத்து இருவரும் தம் உள்ளத்தில் எழுந்த காதலை தங்களுக்குள் புதைத்துக் கொண்டு.

பேசுவதற்கு வார்த்தையேதும் இன்றி கண்கள் காவியம் பாட விழி நீராத் துடைத்துக் கொண்டு கமல் வடக்கு பல்கலைக்கழகம் நோக்கியும் ஹாருணி கிழக்கு பல்கலைக்கழகம் நோக்கியும் செல்கின்றனர். நட்பு என்ற சொல்லுக்குள் மறைந்து போனது இவர்களது காதல்.

சில வேளையில் உணர்வுக்கு உயிர் கொடுப்பதை விடவும் உண்மையான உறவுகளுக்கு உயிர் கொடுக்கலாம்.

நன்றி

**மேனுகா வேலாயுதம்**
**வரோதய நகர்**
**திருகோணமலை**

---

# வானில் குள்ளன்

குள்ள மனிதனை பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆமாம் அவனே தான். கட்டைவிரல் அளவிற்கு மட்டுமே வளர்ந்த அவனை பற்றிய கதை தான் இது. குள்ளனுக்கு நெட்டையளுக்கும் திருமணமாகி மூன்று மாதம் ஆகின்றது. குள்ளன் எந்த வேலையும் செய்யவில்லை. அவன் மனைவி அவனை திட்டிக்கொண்டே இருந்தாள். அவள் வாழ்கை பாழாய் போனது என புலம்பினாள். காசு சம்பாதிக்காமல் வீட்டிற்கே வராதீர்கள் என மனைவி விரட்டிவிட்டாள்.

மனம் உடைந்த குள்ளன் தன் நிலத்திற்கு சென்று நெல்களை உலர்த்தினான்.நெல்லை உலர்த்திவிட்டு அருகே இருக்கும் கட்டிலில் உறங்க சென்றான். மதியம் தூங்கியவன் மறுநாள் காலை எழுந்தான்.

எழுந்தவனுக்கு அதிர்ச்சி. உலர்த்தியதில் பாதி நெல் நாசமாகி இருந்தது, மீதி காணாமல் போயிருந்தது. இரவு இந்திரலோகத்தில் இருந்து ஒரு வெள்ளையானை வந்து நெல்லை நாசமாக்கிவிட்டிருந்தது.

இது குள்ளனுக்கு தெரியவில்லை. யானைன்யின் கால் தடங்களை பார்த்துவிட்டு ஏதோ உரல் தான் இந்த நாசவேலையை செய்தது என்று எண்ணி ஊரில் இருந்த அனைத்து உரல்களையும் கட்டிப்போட்டான்.

மறுநாளும் இதே போல நடந்தது. குள்ளன் குழம்பிவிட்டான். யாரது இந்த வேலையை செய்வது என தீவிரமாக யோசித்து யோசித்து இரவு மீண்டும் வந்துவிட்டது. சரி இரவு தூங்காமல் விழித்திருக்க வேண்டும் என தீர்மானித்து விழித்து இருந்தான்.

அதிசயம். வானில் இருந்து பெரிய வெள்ளை யானை தரை இறங்கியது. யானையின் கழுத்தின் தங்க ஆபரணங்கள். அதன் மீது பளபளக்கும் போர்வை. நீண்ட தந்தம். ஒரு நிமிடம் அசையாமல் ஆச்சரியத்தில் நின்றான் குள்ளன். சமாளித்துக்கொண்டு யானையின் அருகே சென்றான். யானைக்கு தெரியாமல் அதன் வாலை பிடித்துக் கொண்டான். யானை நெல்களை சாப்பிட்டு வானில் பறந்தது. குள்ளனும் அதனுடன் பறந்து சென்றான்.

இந்திரலோகத்திற்கு சென்ற வெள்ளை யானை தன் இருப்பிடத்திற்கு சென்றது.குள்ளன் இறங்கி சுற்றி பார்த்தான். பெரிய பெரிய அறைகள். ஒவ்வொரு அறையிலும் தங்க கட்டிகள், வெள்ளி கட்டிகள் , ஆபரணங்கள் என ஜொலித்தது.

தன்னால் முடிந்த அளவு தங்கத்தை எடுத்துக்கொண்டான். மறுநாள் வரை யானையின் பின்னாலே ஒளிந்துகொண்டான். மறுநாள் இரவும் யானை பூமிக்கு புறப்பட்டது. தன் நிலத்திற்கு வந்தபோது இறங்கிக் கொண்டான். இப்படியே அடிக்கடி நிறைய தங்கம் எடுத்துவந்தான்.

நெட்டையள் மிகவும் சந்தோஷப்பட்டாள். கணவன் கை நிறைய தங்கம் கொண்டு வரும் ரகசியத்தை குள்ளனிடம் கேட்டள். நீண்டநாட்களுக்கு பிறகு அவன் அந்த ரகசியத்தை கூறினான். மனிதர்களுக்கே உண்டான பேராசை நெட்டையளையும் பற்றிக்கொண்டது.

அடுத்த நாள் இரவு தானும் வருவதாகவும், அவள் வந்தாள் நிறைய தங்கம், எடுத்துவரலாம். நிறைய ஆபரண போட்டு வரலாம். குள்ளன் நூறு முறை சென்று வருவதும் அவள் ஒரு முறை வருவதும் ஒன்று என்றாள்.ம்ம் சரி சரி என்றான் குள்ளன்.

மறுநாள் நெல் காயவைக்கப் பட்டது. வெள்ளை யானை வானிலிருந்து பறந்துவந்தது. நெட்டையள் வாயை பிளந்தாள். அதன் அழகை கண்டு. குள்ளனின் யோசனைப்படி யானை பறக்கும் போது குள்ளன் அதன் வாலினை பிடித்துக்கொள்வான், நெட்டையள் குள்ளனின் காலினை பிடித்துக் கொள்வாள்.

இந்திரலோகம் சென்றது இருவரும் பெரிய அறைகளுக்கு சென்று தங்கம் எடுத்து வரவேண்டும்.

அதன்படியே யானை பறக்கும் சமயம் குள்ளன் அதன் வாலை பற்றிக்கொள்ள குள்ளனின் காலினை நெட்டையள் பற்றிக்கொள்ள மூவரும் வானத்தில் பறந்தனர்.

பறந்து கொண்டு இருக்கும் போதேஏங்க இன்னும் எவ்வளவு தூரம்..? என்றாள். அரை மணி நேரத்தில் போய்விடலாம்.. என்றான். அமைதியாக இருக்காமல்.

ஏங்க அங்க என்ன என்ன இருக்குங்க எத்தனைமுறை சொல்வது, தங்கம், வைரம், வைடூர்யம், வெள்ளி எல்லாம் என்றான். என்னங்க அங்க எவ்வளவு தங்கமுங்க இருக்கும்.. அடி செல்லமே. இவ்வளவு தங்கம் இருக்கும் என கைகளை அகல விரித்தான் குள்ளன்.

பறந்து கொண்டு இருந்தது ஒன்று மட்டும் தான். விழுந்து கொண்டிருந்தது குள்ளனும் அவன் மனைவியும். தொப்பென அந்த யானை போட்டுச்சென்ற சாணத்தில் விழுந்து உயிர் தப்பினர்.

இந்த சம்பவம் பிறகு யானை திரும்ப வரவே இல்லை. அதுவரை கிடைத்த தங்கம் வைத்து புதிய தொழில் தொடங்க யோசித்து வருகின்றான் குள்ளன். நீங்களும் உங்க யோசனையை சொல்லுங்க குள்ளனுக்கு.

**விழியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## மீண்டும் மடியும் இருட்டு

இருட்டை எழுத
முனைகிறது - என்
பேனா

முனைவின் போது
வெந்நிறத் தாளில்
தன் நிறம் கொண்டு
வரிகள்......
இருட்டை வரைய
முயலும்

இருட்டை
இருளினுள்
இருந்து எழுதும்
என் முயற்சி...

இருளின் நிறத்தை
உணர... உணர
வெண்நிறத் தாளில்
தன்னிறம் கொண்டேகும்
என் கோல்
இருட்டை வரையும்
முயற்சியில்
தொடர்பற்ற சலனங்களை
அலங்கோலக் கோடுகளாய்
கிழிக்கும்.....

இருளின் இருட்டை
உணர ... உணரப்
பயம்....

அக்
காரிருள் நிறம்
அரக்க வடிவம் பூண்டு
அருகில் வரும்....
பாசக் கயிறு ஏந்தி

இருளின் உரிமையாளர்கள்
என் முன்னே... இதோ
இதோ..... இதோ......
உங்களுக்குத் தெரியாது....
அவர்கள் என்னருகில்
இருப்பதை..... இருள்
அதை மறைக்கும்.....

ஐயோ.... இதோ
இதோ.... என்னருகில்
இருளின் உரிமையாளர்கள்....

எனைக் கேள்வி கேட்கிறார்கள்..

நீ..யார்? இருட்டை வரைய...

கெக்கலிக்கும் அவர்களின்
சிரிப்பு...
வெண்நிறத் தாளில்
நான் வரைய முயன்ற
இருட்டின் கிழிப்புக்களைக்
கேலி செய்கின்றன...

உன்னாலும் முடியாது
இருட்டை வரைய....
முயன்றோர் எல்லாம்
இருட்டின் கறுப்பில்
கரைந்து போனார்கள்
உன்னால் முடியாது
இருட்டை வரைய

இருட்டை வரைய
முடியாதென் விரல்கள்
நசுங்கிப் போயின...

என் ஓலக்குரலை
இரசித்த வண்ணம்
இருள் - கரைகிறது
அந் நாளில்...

விடியலில் நான்
தொலைந்து போயிருந்தேன்....

அனாதரவாய்
அவ்வறையில்
ஓர் எழுதுகோல்
வெற்நிறத் தாள்...
ஓரிரண்டு
இரத்தத் துளிகள்......

வசந்த விக்ரம துங்க வின் நினைவாக.... மாயன்

## மதுவும் மாதுவும்

மதுவும் மாதுவும்
மங்கையும் மதுவுமொன்று
மயக்கிடும் தன்மை தன்னில்
பயகயத்தமரும் பிரம்மன்
பாங்கியும் அமர்ந்தாள் பக்கம்.

திங்களைச் சூடுமெங்கள்
சிவனது உமையுங்கூட
பங்கெனப் பாதிபெற்றால்
பாதியைக் கொடுத்தாரென்றும்.

பேதைதான் இரண்டுமென்றால்
புனிதமும் உண்டு அங்கு
பார்த்திட்டால் போன ஒன்று
பருகிட்டால் போதை மற்று.

சாதனை போதைக்குண்டு
சரித்திம் பலவுமுண்டு
ஆட்சிகள் உயர்ந்ததுண்டு
அனேகமாம் சரிந்ததுண்டு.

போதையைத் தேடி அன்று
போயினர் சங்ககாலம்
பேதையைத் தேடிச்சென்று
பெற்றிட்ட வரலாறுண்டு.

மாதவி போதையாலே
மயங்கினான் கோவலன்தான்
காவியங் கண்டோமின்று
கண்ணகி சிலம்பினாலே.

விரும்பிய பெண்டீர் போனால்
விருப்போடு தாடி மீசை
பருகிடும் பழைய கள்ளு
பலர் பெயரோ தேவதாசு

சாதனை படைக்குந் தன்மை
தரணியில் போதைக்குண்டு
வேதனை பலவுமுண்டு
வீதியில் அலைவதுண்டு.

கோலங்கள் மாற்றஞ் சக்தி
குவலயத் திருப்பதெல்லாம்
மங்கைக்கு முண்டு கண்டீர்
மதுவுக்கு முண்டு உண்மை.

சேனையூர் இரா. அரத்தினசிங்கம்
கொட்டியாரம், இலக்கிய மாப

# முடியாது என்பது கிடையாது

"வாழ்க்கை என்பது போர்க்களம்
அதை வாழ்ந்துதான் பாக்கனும்"

வாழ்க்கையிலே நினைத்தவுடன் வெற்றி கிட்டுமென எதிர்ப்பார்ப்பது புத்தி சாலித்தனமானதல்ல. தோல்வி கண்டவர்கள் "முடியும்" என்ற அயராத முயற்சியால் வெற்றியின் சிகரத்தில் திகழ் கின்றனர். "முடியாது என்பது கிடையாது" என்ற தன்னம்பிக்கையுடன் தம் ஆற்றலால், அறிவால் என்பதைவிட விடாமுயற்சியால் வெற்றி பெற்றவர்கள் தான் ஏராளமெனலாம்.

மனிதத்துவம் மடிந்து, மனிதனே மனிதனை வேட்டையாடும் இவ்வுலகில் மற்றவர்களை அழித்தொழிக்க ஆவேசத் துடன் செயல்படுபவர்களும் இன்று எம்மிடையே உள்ளனர். முடியும் என்பவர்களால் நன்மையோ, தீமையோ எதையும் நன்றே நடைமுறைப்படுத்த இயலும் அதைத் தேர்ந்தெடுக்கும் தெளிவு எம் மனச்சான்றின் செயற் பாட்டில், மனித விழுமியங்களின் அடிப் படையில் மிளிர இடமளிக்க வேண்டும். "நமக்கு உகந்ததையே தேடலாகாது அடுத்து வருடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்க -ளுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்"

என்ற வார்த்தை எம்மிடையே வாழப்பட வேண்டும். ஒருவரின் முன் னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவும், முழு உற்சாகத்தை உருவாக்கக் கூடியதாகவும் எம்மால் இருக்க முடியும். ஒருவரின் நற்பெயரை நானிலத்தில் கெடுக்கவும் முடியும்.

நல்லதென்று எடுத்துச் சொல்லவும் முடியும். "முடியும்" என்ற பதத்தை முறையாகப் பயன்படுத்தி எம் வாழ்வையும், எம்மை நம்பியவர் வாழ்வையும் வளப்படுத்தினால் நல்நோக்கு நிறைவடையும். "முடியும்" என்னும் பதம் ஒருவரது வாழ்வை ஆககும் சக்தியையும், அழிக்கும் சக்தியையும் தன்னகத்தே கொண்டது.

ஐரோப்பாவை ஆட்டிப் படைத்த அதிசிறந்த மாவீரன் நெப்போலியன் கூட தன் வாழ்வின் அகராதியில் "முடியாது" என்ற பதமே இல்லையென உரைத்து உறுதியுடன் வாழ்ந்து வெற்றியும் கண்டான். முடியும் என்று நினைத்தால் எதிரியையும் எம்மவராக்கிடலாம்.

"சன்" தொலைக்காட்சியில் இடம் பெறும் "சாம்பியன்" நிகழ்வுகளைக் காண்பவர்களின் கண்களில் நீர் சுரப்பதுடன், இதயமதில் இரக்கமே ஊற்றெடுக்கின்றது. ஆற்றல்களையும், அறிவையும் வெளிக்கொண்டு வர உடல் ஊனம் ஒரு தடையல்ல என்பதற்கு இந் நிகழ்வு சிறந்த எடுத்துக்காட்டாகி நிற்கின்றது.

சென்னையைச் சார்ந்த மாணவன் ஜனார்த்தன் எட்டு வயதில் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி, இரு கரங்களையும், ஒரு காலையும் இழந்தான். சிகிச்சையின் போது, தன்னால் கல்வி கற்க முடியவில்லையே என்று விரக்தியடைந்து விம்மினான். இதைக் கேட்ட வைத்தியர், "வாயால் எழுது உன்னால் முடியும்" என்றார்.

அந்த வார்த்தைகள் உண்மையிலேயே அவனுக்கு உற்சாகத்தையும், உந்து சக்தியையும் வாரி வழங்கி, எல்லோரும் கையால் எழுதுவதையும், ஓவியம் வரைவதையும் போல் அவனால் வாயால் எழுதி, வரையும் அளவிற்கு முடிந்தது. "உன்னால் முடியும்" என்ற வளமான வார்த்தையே அவனது முன்னேற்றத்திற்கு வித்திட்டது வரைந்ததில் பல விருதுகளையும் பெற்றான்.

இன்று எம்மிடையே நிலவும் இன, மத,சாதி, மொழி வேறுபாடுகளை தகர்த்தெறிய எம்மால் முடியும். நற்பண்புகளை உருவாக்கி விட்டால் யாம் ஏங்கித் தேடுகின்றது சமாதானம் என்னும் கொடையை அடைந்திட முடியும். மானிடரிடையே ஒன்றிப்பு ஏற்பட்டால் வேறுபாடுகளைக் களைந்திடவும் முடியும்.

"முடியும்" என்ற வார்த்தையால் தொழில்நுட்ப வளர்ச்சியின் நிமித்தம் இன்று நாற்றிசையும் நன்மைக ளாலும் தீமைகளாலும் சுழன்று கொண்டிருக் கின்றது.

ஒவ்வொரு மானிட உள்ளமும் உயர்ந்தால் முழு உலகினதும் உயர்வை யாரும் தடை செய்ய முடியாது முடியும் என்னும் கொல்லை பயனுள்ளதாக்க தீமையை வெறுத்து, நன்மையை விதைத்து, நானிலத்தவரும் நட்புடன், நல்லுறவுடன் வாழ வழி வகுக்கம் கருவிகளாகிடுவோம்.

ஜெயவதனி மரியதாஸ்
தி/புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வி
திருகோணமலை முற்றும்.....

# அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும்.

மேலும் நாடகசெயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஒன்றை அவதானித்தல் அதைப்போலச் செய்தல் போன்ற விடயங்கள் பாடவிதானத்தில் அவசியமாகின்றன.

ஆகவே இவ்வாறான திறன் களையும் அரங்க விளையாட்டுக்கள் மூலமாக வழங்க முகின்றது. இதற்கு உதாரணமாக "சோடியைக் கண்டுபிடி த்தல்" எனும் விளையாட்டைக் கூறலாம். இவ்விறையாட்டானது கீழ்வருமாறு அமைகிறது.

"ஒவ்வொரு சிறிய துண்டு பேப்பர் எடுக்கப்பட்டு அதில் மிருகங்களின் பெயர்கள் அல்லது பறவைகளின் பெயர்கள் எனப்படும்.

இதில் ஆண்மிருகம் எனவும் ஆண்பறவை, பெண்பறவை எனவும் சோடி சோடியாக பல மிருகங்களினதும், பறவைகளினதும் பெயர்கள் எழுதப்பட்டு சுருட்டி வைக்கப்படும். பின்பு விளையா ட்டில் பங்கு பற்றும் சிறுவர்களை அழைத்து சுருட்டி வைக்கப்பட்ட பேப்ப ர்களில் ஒன்றை எடுக்குமாறு கேட்கப்படு வார்கள். சுருளை எடுத்தவர்கள் அதில் உள்ள மிருகம் அல்லது பறவையின் குணாம்சங்களை தனது அசைவினூடாக வெளிப்படுத்தி திரிய வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொருவரும் செய்து கொண்டு தனது சோடியைக் கண்டு பிடிக்க வேண்டும். அவ்விளை யாட்டில் மிருகங்களின் சத்தத்தை வெளிப்படுத்தக் கூடாது. சத்தத்தின் மூலம் இலகுவாக சோடியைக் கண்டு பிடித்து விடலாம்.



இவ்வரங்க விளையாட்டினூடாக மாணவர்களின் அவதானித்தல்திறன் அதனைப் போன்று செயற்படும்திறன் ஆகிய வற்றை 'வளர்த்துக்கொள்ள நேரிடுகிறது."

"விளையாட்டுக்கள் எல்லாமே நாடகத்தன்மை கொண்டவையாகவே உள்ளன. துடுப்பாட்டமாக இருந்தாலென்ன கால்பந்தாட்டமாக இருந்தா லென்ன கிளித்தட்டு, தாச்சியென எதுவாக ஏற்றல், தனது வகிபாகத்துக்கான பணிகளை ஏற்றுச்செய்தல், அவற்றுக்குரிய உணர்வோடு நிற்றல், அவற்று க்குரிய இடங்களில் நின்று பணிபுரிதல், அவற்றை செவ்வனே நிறைவு செய்வதற்கு உகந்த உடைகள் அணிந்து கொள்ளுதல், உரியவர்களோடு இணைந்து செயலாற்றுதல் எனப் பலவும் நாடகச் செயற்பாட்டுக்கு அவசியமான அனைத்தையும் கொண்டிருப்பதை நாம் காணலாம்."

மேலும் அரங்க விளையாட்டுக்கள் மூலமாக மொழி தொடர்பான ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ள முடியும். இக்குரலானது பேசுகின்றபோது தெளிவான அழகான பேச்சைக் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

அடுத்தவாரம் அரங்கு அசையும்...

திருமதி. உமா சிறிசங்கர்
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரட்டை பொங்கல் கொண்டாடும் காஜல்

இந்த வருடம் இரட்டைப் பொங்கல் கொண்டாடவிருக்கிறாராம் காஜல் அகர்வால். விஜய்யுடன் ஜோடி சேர்ந்திருக்கம் 'ஜில்லா' படம் இந்தப் பொங்கலை முன்னிட்டு ஜனவரி 10ம் திகதி வெளியாகிறது.

அதேபோல தெலுங்கில் ராம்சரண் நடித்து ஜனவரி-12ம் திகதி வெளியாக இருக்கும் 'எவடு' படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடித்திருக்கிறார் காஜல். ஸ்ருதிஹாசன், எமி ஜாக்சன் ஆகியோர் தான் கதாநாயகிகள் என்றாலும் தானும் நடித்திருப்பதால் படத்தின் ரிலீஸை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளாராம். அத்துடன் படங்களை திரையரங்கில் மட்டுமே போய் பார்க்கவேண்டும் என்று ரசிகர்களுக்கு அன்பு வேண்டுகோளும் விடுத்துள்ளார் காஜல்

# சிம்புவை முத்தமிட ஷரூ.50 லட்சம் கேட்ட தீக்ஷா சேத்



சிம்புவுடன் முத்தக்காட்சியில் நடிக்க 'ரூ.50 லட்சம் கேட்டுள்ளாராம் நடிகை தீக்ஷா சேத். ராஜ பாட்டை படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடித்தவர் தீக்ஷா சேத், இவர் தெலுங்கில் முன்னணி நடிகையாக உள்ளார். தற்போது தமிழில் வேட்டை மன்னன் படத்தில் நடிக்கிறார், இதில் சிம்புவும், தீக்ா சேத்தும் உதட்டோடு உதடு முத்தமிடுவது போன்று காட்சிகளை வைக்க இயக்குனர் விரும்பியுள்ளார்.

இதனால் தீக்ஷா சேத்தை அணுகி முத்த காட்சியில் நடிக்கும்படி கேட்டுள்ளனர், முதலில் மறுத்த அவர் பிறகு சம்மதித்தார். மேலும் முத்தக்காட்சிகளில் நடிப்பதற்காக மட்டும் 'ரூ.50 லட்சம் தர வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளாராம். சம்பளத்தை தவிர்த்து முத்த காட்சிக்கு மட்டும் அவர் 'ரூ.50 லட்சம் தேட்டாராம். கேட்ட தொகையை கொடுப்பதா? அல்லது முத்த காட்சி வேண்டாம் என விட்டு விடுவதா என்ற யோசனையில் படக்குழுவினர் உள்ளனர்.

# யாராக இருந்தாலும் ரொமான்சில் கலக்குவேன்: ப்ரியங்கா சோப்ரா

படங்களில் என்னால் யாரையும் ரொமான்ஸ் செய்ய முடியும் என்று கூறியுள்ளார் ப்ரியங்கா சோப்ரா. பாலிவுட்டில் முன்னணி நாயகியாக வலம் வரும் ப்ரியங்கா சோப்ரா மும்பையில் நடைபெறும் 59வது பிலிம்பேர் விருது வழங்கும் விழாவினை, நடிகர் ரன்பிர் கபூரும் இணைந்து தொகுத்து வழங்குகிறார்.

ப்ரியங்கா முதல் முறையாக விருது விழாவை தொகுத்து வழங்குகிறார். இந்நிலையில் ரீல் வாழ்க்கையில் காதல், கொமடியில் கலக்கும் 'ாருக்கும், ப்ரியங்காவும் ஜோடியாக விழாவை தொகுத்து வழங்கினால் நன்றாக இருக்கும் என்று பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு பதிலளித்த ப்ரியங்கா, அது என்ன ஷாருக், என்னால் யாரையும் படத்தில் ரொமான்ஸ் செய்ய முடியும். அது என் தொழில் என்று கூறியுள்ளார்.



# ரம்யா நம்பீசனுடன் வைபவ்

பீட்சா நாயகியுடன் ஜோடி சேர்ந்து கலக்குகிறார் வைபவ். கேமியோ பிலிம்ஸ நிறுவனம் சார்பில் சி.ஜே.ஜெயகுமார் தயாரிக்கும் படம் 'டமால் டுமீல்'. இந்தப் படத்தில் வைபவ், ரம்யா நம்பீசன் ஜோடியாக நடிக்க, அறிமுக இயக்குனர் ஸ்ரீ இயக்குகிறார். தமன் இசை அமைக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவருகிறது.

இப்படத்தின் ஒளிப்பதிவு பொறுப்பை ஆர்.எம்.எட்வின் சகாய் ஏற்றிருக்கிறார். கொமடி கலந்த ஆக்ஷன் த்ரில்லர் படமாக உருவாகி வருகிறது 'டமால் டுமீல்'.

# விரைவில் "வல்லினம்"

விரைவில் திரைக்கு வருகிறது நகுலின் வல்லினம். 'ஈரம்' என்ற மிரட்டலான படத்தைக் கொடுத்த அறிவழகன் இயக்கியுள்ள படம் 'வல்லினம்'.



விளையாட்டையே வாழ்க்கையாக நினைக்கும் ஹீரோ, வாழ்க்கையை விளையாட்டாக நினைக்கும் ஹீரோயின் இவர்களின் காதல் எப்படி போகிறது என்பது படத்தின் கதை. விளையாட்டு பின்னணியில் உருவாகியுள்ள இந்த ஆக்ஷன் படத்தில் கால்பந்து வீராக நகுல் நடித்திருக்கிறார்.

கதாநாயகியாக மிருதுளா நடித்திருக்கிறார். ஆஸ்கர் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் தயாரித்துள்ள இந்தப்படத்தின் பாடல்கள் ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பே வெளியானது. படப்பிடிப்பு முடிந்த நிலையில் சில காட்சிகளை ரீ ூட் செய்ததாகவும் அதே சமயம், படத்தில் கிராபிக்ஸ் பணிகள் அதிகம் இருப்பதால் அதற்கு தகுந்த நேரத்தை எடுத்துக்கொண்டதால் தான் படம் வெளியிடுவதில் தாமதம் என்றும் கூறப்பட்டு வந்த நிலையில் தற்போது படத்தை விரைவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.



# சினிமுரசு

## ஐரோப்பிய திரைப்பட விழா - 2013

**அ. யேசுராசா**

ஐரோப்பியத் திரைப்பட விழா மூன்றாவது ஆண்டாக யாழ்ப்பாணத்தில், மார்கழி 14 – 15 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்முறை யாழ். பொதுநூலகத்தில் அது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முந்திய ஆண்டுகளில் திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற விழாக்களுக்குப் பார்வையாளர் குறைவாகவே வந்தனர் இத்தனைக்கும் விழாவில் திரைப்படங்கள் இலவசமாகவே காட்டப்படுகின்றன.

ஆனால், இம்முறை ஒப்பீட்டளவில் கூடுதலான பேர் வந்தனர் அதிலும், முதல் நாளின் முதலிரண்டு காட்சிகளுக்கு மண்டபம் நிறைந்திருந்தமை ஆறுதலைத் தந்தது! நாளொன்றுக்கு மூன்று என்றவாறாக இரண்டு நாள்களிலும் ஆறு திரைப்படங்கள் காட்டப்பட்டன. நான்கு படங்கள் சிறுவர் திரைப்படங்கள் மற்றைய இரண்டும் வளர்ந்தோருக் குரியவை. எல்லாப் படங்களுக்கும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்கள் இருந்தன.

### 1. சமுத்திரத்தின் நிறம்

(Color of the Ocean) யேர்மனி.

சுபீட்சமான வாழ்வைத் தேடி ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து வரும் அகதிகள், ஆபத்தான கடற்பயணத்தின் பின் கனறி தீவை அடைகின்றனர். அங்கிருந்து ஸ்பெயினின் பிரதான நிலப்பகுதிக்குச் சென்று, பின்னர் ஐரோப்பாவின் பிற பகுதிகளுக்குச் செல்ல முயல்வர்.

பலர் கடலில் காணாமற் போகின்றனர் கரைசேரும் படகுகளில் சிலர் அரைகுறையாய் உயிர்பிழைத்திருக்கப்பலர் சடலங்களாகியிருப்பர். கொங்கோவைச் சேர்ந்த ஸோலா சிறுவனான தனது மகன் மாமடோவுடன் வந்த படகு, கனறி தீவை அடைகிறது.

18 பேர் இறந்துவிட 10 பேரே அரைகுறை உயிருடன் தப்புகின்றனர். தண்ணீருக்குத் தவிக்கும் மாமடோவுக்கு, கடற் குளிப்பிலிருந்து வரும் யேர்மன் சுற்றுப்பயணியான நத்தாலி தனது தண்ணீர்ப் போத்தலிலிருந்து தண்ணீர் கொடுக்கிறாள் பிறகும் ஆதரவாக நடந்துகொள்கிறாள்.

எல்லைக் காவற்றுறை அதிகாரி ஜோசே கடினமாக நடந்துகொள்பவன் ஸ்பெயினில் பிறக்கும் குழந்தைகளிற்குரிய வளத்தைச் சுரண்டுபவர்கள் அகதிகளென்பது, அவனின் கருத்து. கொங்கோவைச் சேர்ந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்படுகிறது. செனிகலைச் சேர்ந்தவர்கள் அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

ஜோசே பிடிவாதமாக, ஸோலாவையும் மகனையும் செனிகலைச் சேர்ந்தவர்களெனவே சாதித்து, அகதி முகாமுக்கு அனுப்புகிறான் இருவரும் அங்கிருந்து தப்பி ஓடுகின்றனர். பிரதான நிலப்பகுதிக்குக் கள்ள மாய்ப் படகில் செல்லப் பணம் தேவைப்படுகிறது நத்தாலி 500 யூறோ பணம் கொடுக்கிறாள்.

பயணத்துக்கு உதவி செய்வதாகக் கூறிய இன்னொரு ஆபிரிக்கன், பணத்திற்காகத் தகப்பனையும் மகனையும் இன்னொருவனுடன் சேர்ந்து தாக்கியதில், ஸோலா படுகாய மடைந்து மருத்துவமனையில் இறக்கிறான்.

அநாதை என்றால் அகதி அந்தஸ்து கொடுக்க வேண்டும் ஏற்கெனவே, தான் கொடுத்த பணத்தால் தான் இவ்வாறெல்லாம் நடந்ததென்ற குற்ற உணர்வில் அவதிப்படும் நத்தாலியா, சிறுவனுக்கு அகதி அந்தஸ்து கிடைப்பதில் கவனமாயிருக்கிறாள்.

அதன் மூலம் அவனது எதிர் காலம் ஸ்திரமாகும் என்பது அவளது நம்பிக்கை! சிறந்த வாழ்வுக்கான நம்பிக்கையில், ஆபத்தான வழிகளில் ஐரோப்பாவுக்குள் நுழைய முயலும் அகதி மனிதர்களின் கதை அவலமானது் அது எம்மவரின் கதை போலு முள்ளது! இந்தத் துயரங்களையும், இறுகிய மனப்போக்குள்ள அதிகாரிகளையும், மனிதாபிமானங் கொண்டசில மனிதர் களையும் படம் சித்திரிக்கிறது.

இதன்மூலம் இப்பிரச்சினை பற்றிய விழிப்புணர்வு பார்வையாளரிடம் நன்கு உருவாக்கப்படுகிறது. இப்படத்தின் நெறியாளர் :மகி பெரென் என்னும் பெண்..... **(தொடரும்)**

**ஜீவாநதி**

# 'வா' என மாறிய அருண் விஜய்யின் 'டீல்'



அருண் விஜய் நடிக்கும் 'டீல்' படத்தின் தலைப்பு மாற்றப்பட்டுள்ளது. 'தடையற தாக்க' படத்திற்குப் பிறகு அருண் விஜய் நடிக்கும் படம் 'டீல்'. சிவஞானம் இயக்கும் இப்படத்தில் அருண் விஜய்க்கு ஜோடியாக கார்த்திகா நாயர் நடிக்கிறார்.சுறுசுறுப்பாக நடந்து வ்ந்த இந்துப் படத்தின் படப்பிடிப்பு முடிந்து, இப்போது போஸ்ட் புரொடக்ஷன் வேலைகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் "டீல்" என்ற படத்தின் தலைப்பினை "வா" என்று மாற்றிவைத்துள்ளனர். தலைப்பு தமிழில் இல்லை என்பதால் இத்தலைப்பினை மாற்றியுள்ளதாக தயாரிப்பாளர் தரப்பில் கூறியுள்ளனர். தமன் இசையமைத்திருக்கும் இப்படம் விரைவில் வெளியாகவிருக்கிறது.



# கார்த்தியின் "சிறுத்தை 2"



கார்த்தி நடித்து வெற்றிகரமாக ஓடிய சிறுத்தை படத்தின் 2ம் பாகம் தயாராகி கொண்டிருக்கிறது. சிவா இயக்கத்தில் கார்த்தி, தமன்னா ஜோடி போட்ட படம் சிறுத்தை. 2011ம் ஆண்டு வெளியான இப்படத்தில் கார்த்தி இரட்டை வேடத்தில் நடித்திருந்தார்.

பட்டி தொட்டியெல்லாம் பட்டையை கிளப்பி வசூல் மழையை பொழிந்த இப்படத்தின் இரண்டாம் பாகத்தை தயாரிக்க இருக்கிறரார் சிவா.

தற்போது அட்டகத்தி ரஞ்சித்தின் இய[illegible] மையமாக வைத்து எடுக்கப்படும் படத்தில் [illegible] இந்தப் படத்துக்குப் பிறகு சிவா இயக்கத்தில் சிறுத்தை இரண்டாம் பாகத்தில் கார்த்தி நடிக்கிறார்

# தள்ளிப்போகும் "வீரம்

வீரம் தெலுங்கு வெளியீடு இரண்டு வாரங்கள் தள்ளிப்போட முடிவுசெய்யப்பட்டுள்ளது.

"சிறுத்தை" சிவா இயக்கத்தில் அஜித், தமன்னா உட்பட பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்துள்ள வீரம் படம் ஜனவரி 10ம் திகதி வெளியாகவுள்ளது. இதே நாளில் "வீரம்" படத்தின் தெலுங்கு பதிப்பையும் முதலில் வெளியிட திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் ஜனவரி 10ம் திகதி ஆந்திராவில் சங்கராந்தியை ஒட்டி மகேஷ்பாபுவின் "1" படமும், ராம்சரண் தேஜாவின் "யவடு" படமும் வெளியாகவிருப்பதால் திரையரங்கு கிடைப்பதில் சிக்கல் [illegible]னால் "வீரம்" தெலுங்கு டப்பிங்கை இரண்டு வாரங்கள் [illegible] முடிவு செய்துள்ளனர். வீரம் படத்தின் தெலுங்குப் பதிப்புக்கு "வீருடொக்கடே" என்று பெயர் வைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது செயற்கை இதய மாற்றுச் சிகிச்சை



75 வயதுடைய வயோதிபர் ஒருவருக்கு உலகின் முதலாவது செயற்கை இருதய மாற்று சிகிச்சையினை செய்து பிரான்ஸ் மருத்துவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள். பிரான்ஸின் தலைநகர் பரிசிலுள்ள ஜோர்ஜெஸ் பொம்பிடோ மருத்துவமனையில். இருதயமாற்று சத்திரசிகிச்சை நிபுணர் அலன் கார்பெண்டியர் தலைமையிலான மருத்துவர்களே மேற்படி சாதனை இருதய மாற்று சிகிச்சையினை மேற்கொண்டுள்ளனர். உயிரியர் மருத்துவ நிறுவனமான "காமெட்" நிறுவனத்தில், சுமார் 25 வருடங்களாக சோதனை முயற்சியில் இருந்த செயற்கை இதயத்தினையே 75 வயதுடைய முதியவருக்கு பொருத்தியிருக்கிறார்கள். இந்த இருதய மாற்று சிகிச்சை கடந்த புதன்கிழமை (18) ஜோர்ஜெஸ் பொம்பிடோ மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது. இருப்பினும், இந்த இருதய மாற்று சிகிச்சை பற்றிய கடந்த சனிக்கிழமை (21) தான் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

செயற்கை இதயத்தினை உருவாக்கிய மருத்துவர்களான அலன் கார்பெண்டியர் மற்றும் பிலிப்பே பௌலற்றி ஆகியோர், இந்த செயற்கை இதய மாற்று சிகிச்சை பற்றி குறிப்பிடுகையில்... சாதாரணமான மனித இதயத்தினை விட மூன்று மடங்கு அதிகமான, அதாவது சுமார் 900 கிராம் நிறையுடையது இந்த செயற்கை இதயம். லித்தியம் பற்றரிகளின் உதவியுடன் இந்த இதயம் இயங்குகிறது. தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள செயற்கை இதயமானது 75 வீதமான ஆண்களுக்கும் 25 வீதமான பெண்களுக்கும் பொருந்தக் கூடியது. இருந்தபோதிலும், இதனை அனைத்து தரப்பினருக்கும் பொருத்தக்கூடிய வகையில் தயாரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த செயற்கை இருதய மாற்று சிகிச்சைக்கு சுமார் 160,000 ஈரோக்கள் (சுமார் 29 மில்லியன் ரூபாய்) செலவாகின்றன. சாதாரண இதயமாற்று சிகிச்சைக்கும் கிட்டத்தட்ட இதே அளவுதான் செலவாகின்றது. இந்த செயற்கை இதயமானது சுமார் 5 வருடங்கள் தொடர்ச்சியாக இயங்கக் கூடியது என்பது சிறப்பானதாகும் என்று குறிப்பிட்டனர்.

# பேஸ்புக் மெசேஞ்சரில் எஸ்.எம்.எஸ் அனுப்பலாம்

பேஸ்புக் மெசஞ்சரில் எஸ்.எம்.எஸ் அனுப்பும் வசதியை பேஸ்புக் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி அன்ட்ரொய்ட் மெசேஞ்சர் அப்ளிகேசனை அப்டேட் செய்வதன் மூலம் இந்த புதிய தொழில்நுட்ப வசதியை ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த சேவையை பேஸ்புக் கணக்கு மற்றும் மின்னஞ்சல் முகவரி இல்லாமலும் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதியை பேஸ்புக் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த புதிய பேஸ்புக் மெசேஞ்சர் அப்ளிகேசன் வசதியானது இந்தோனேசியா, வெனிசுலா, அவுஸ்திரேலியா மற்றும் தென்னமெரிக்கா ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஏனைய நாடுகளிலும் அதனை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த சேவையைப்பெற பயனாளர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் மட்டும் போதுமானது என்று பேஸ்புக் நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காக இந்நிறுவனம் பல முன்னணி கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுடன் இணைப்பு வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் பையன்

## செவ்வாய் செல்வோருக்கு அதி நவீன ஆடை



செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பி அங்கு ஆய்வுகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ள நாசா, அதற்காக விண்வெளி வீரர்களுக்கென அதி நவீன ஆடைகளையும் தயாரித்துள்ளது. ஒட்சிசன் வாயுவை விநியோகிக்கவும் காபனீரொட்சைட்டை வெளியேற்றவும் ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆடைகள், அதிக வெப்பம் மற்றும் குளிரில் இருந்து விண்வெளி வீரர்களைப் பாதுகாக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என தெரிக்கப்படுகின்றது. 1992ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்தவாரே தற்போதைய விண்வெளி வீரர்கள் தங்களது ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையிலேயே, அதி நவீன ஆடைகளை விண்வெளி வீரர்களுக்காக தயாரிக்க நாசா தீர்மானித்திருந்தது. பல கடினமான நூலிழைகளால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நவீன ஆடைகள், நெகிழும் தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## 125 பில்லியன் ஷரூபாய்க்கு இன்ஸ்ராகிராமை கொள்வனவு செய்தது பேஸ்புக்

பிரபல புகைப்படப் பகிர்வு மென்பொருளான "இன்ஸ்ராகிராம்"இனை புகழ்பெற்ற சமூகவலைத்தளம் 'பேஸ்புக்' ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (125 பில்லியன் 'ரூபாய்) கொள்வனவு செய்துள்ளது. இன்ஸ்ராகிராமினை கொள்வனவு செய்தமை பற்றி பேஸ்புக்கின் ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மார்க் சூக்கர்பெக் கருத்துத் தெரிவிக்கையில்...

'இன்ஸ்ராகிராம் வெகுவிரைவில் அனைவரும் பயன்படுத்துகின்ற சமூகத்தளமாக மாற்றமடையும். வெகுவிரைவில் தங்களுக்கு பிடித்தமான படங்களை நண்பர்கள், உறவினர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும். அதற்காக இன்ஸ்ராகிராம் குழுவினருடன் மிக நெருக்கமான தொடர்பினை பேணவிருக்கிறோம். இன்ஸ்ராகிராமும் அதன் பெறுமதியான குழுவினரும் எங்களுடன் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி. நமது இணைவின்மூலம் சிறந்த பெறுதியை வழங்குவதற்கு காத்திருக்கிறோம்' என்று தெரிவித்துள்ளார்.

ஐபோன்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை சிறிய மாற்றங்களைச் செய்து அழகாக்கி பகிரப் பயன்படும் இம்மென்பொருள் தற்போது ஐபோன்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு 27 மில்லியன் பதிவுசெய்யப்பட்ட பயனாளர்களைக் கொண்டு காணப்படுகிறது. பேஸ்புக்குடன் இணைந்திருப்பதனால் இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஒரு கொலையின் கதை

(37) (மாயன்)

எனவே சரியான சந்தேக நபரை அடையாளம் கண்டு.........

கொண்டால் மட்டுமே அடையாளம் காட்டுபவர்கள் அவரைச் சுட்ட முடியும். சரியாக அடையாளம் காட்டுவதற்கு குறித்த நபரைத் தெளிவறத் தெரிந்திருந்த நபர்களால் மட்டுமே அடையாளம் காட்டக் கூடியதாக இருக்கும்.

அடையாளம் காணும் செயன்முறையில் அடையாளம் காட்டுபவர்கள் தவறானவர்களை அடையாளம் காட்டும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் நிகழ்ந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களே அடையாளம் காட்டுபவராக வரும்போது ஏற்படும் பெரும் இடர் யாதெனில் குறித்த சந்தேகநபரினால் பாதிக்கப்பட்டவர் தான் பாதிக்கப்படும்போது அசாதாரண மனநிலையில் இருப்பதால் சந்தேக நபரைச் சிலசமயங்களில் சரியாக அடையாளப் படுத்தும் மனநிலையில் இல்லாமல் இருப்பர். இதனால் குறித்த காலத்திற்குப் பிறகு சந்தேக நபரை அடையாளம் காட்டுமாறு அழைத்துச் செல்லப்படும் பாதிக்கப்பட்டவர் அடையாளம் காட்டும் செயன்முறையில் தவறிழைத்துவிடும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஏற்கனவே பாதிக்கப்பட்டவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியவருக்கும் இடையில் தொடர்புகள் இருந்தால் பாதிப்பை ஏற்படுத்தியவரைப் பாதிக்கப்பட்டவர் இலகுவாக அடையாளம் கண்டுகொள்வார்.

ஆனால் பாதிப்பு நிகழும்போது தான் முதல்முறையாகப் பாதிப்பை ஏற்படுத்துபவரை பாதிக்கப்பட்டவர் சந்திப்பாராயின் அவரால் அக் கணத்தில் அம் மனிதனை ஞாபகப் படுத்தி வைத்திருக்க ஏதேனும் விசேட அங்க அடையாளங்களை குறித்துக் கொள்ளுதல் உதவியாக இருக்கும்.

பாதிக்கப்படாதவர் தவிர்ந்த சாட்சியங்கள் அடையாள அணிவகுப்பிற்கு வரும் போது அவர்களால் கொஞ்சம் இலகுவாக சந்தேகநபர்களை அடையாளம் காண முடியும்.

அன்று அடையாள அணிவகுப்பிற்கு திகதி குறிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்றம் அடையாள அணிவகுப்பிற்காகத் தயார் படுத்தப் பட்டிருந்தது. உள்வருவதற்கு ஒற்றைக் கதவைத் தவிர ஏனைய கதவுகள் யாவும் பூட்டப்பட்டிருந்ததுடன், நீதிமன்றின் யன்னல்களும் பூட்டப் பட்டிருந்தன.

அடையாள அணிவகுப்பின் நியதிப்படி ஒரு சந்தேகநபருக்கு 7 பேர் வீதம் 14 பேர் மன்றில் சமூகமளித்திருந்தனர். நேரமுள் காலை 10 மணியைக் காட்டும்போது நீதிபதி, நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் மற்றும் தட்டெழுத்தாளர் ஆகியோர் உள்நுழைகின்றனர். மேலும் இரு சட்டத்தரணிகளும் அவர்களுக்கு உதவியாளர்களும் என மொத்தம் நால்வர் சந்தேகநபர்களின் சார்பில் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

சந்தேக நபர்களும் சாட்சிகளும் ஏற்கனவே மன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் இரு சாராரும் வேறு வேறு இடங்களில் அமர்த்தப் பட்டிருந்தனர்.

ஏனைய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிய போது நேரம் 10.45ஐத் தொட்டிருந்தது.

அக்கணத்தில் சந்தேக நபர்கள் இருவரையும் மன்றுக்குள் அழைத்துவரும் சைகை வழங்கப் படுகின்றது. அவர்கள் இருவரினதும் தோற்ற வெளிப்பாடுகளைப் பார்ப்போமா?

அவர்கள் இருவரும் நீண்ட கைகள் கொண்ட மேலங்கியையும் வெவ்வேறு நிறங்கொண்ட நீண்ட காற்சட்டைகளையும் அணிந்திருந்தனர். முகம் சவரம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒருவரின் முகத்தில் பளபளப்பின்மையால் அவரது முகம் நேற்றைய இரவு சவரம் செய்யப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இருவரும் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. அம்மன்றுக்குள் நுழைந்ததும் அவர்களை ஒத்த மேலும் பதின்நான்கு பேர்களை அங்கு கண்டுகொண்டனர்.

அனைவரையும் வரிசையாக நிற்குமாறு பணிப்புரை விடுக்கப்படுகின்றது. ஏனைய பதின்நான்கு பேரும் வரிசையாக நிற்கின்றார்கள். அவர்களது முகமும், அங்க அடையாளங்களும் தெளிவாகத் தெரியுமாறான வெளிச்ச திசையை நோக்கியே அவர்கள் நிற்கின்றார்கள்.

அப் பதின்நான்கு பேரும் தமது நிலைகளைச் சரியாக அமைத்த பின்னர் சந்தேக நபர்கள் இருவரையும் அவ்வரிசையில் எங்காவது நிற்குமாறு பணிப்புரை விடுக்கப்படுகின்றது.

அவர்கள் இருவரும் தமக்கான இடங்களைத் தேர்வு செய்கின்றார்கள். அவர்கள் தேர்வு செய்த இடங்கள் முறையே முதலாம் மற்றும்



பதின்மூன்றாம் இடங்கள் ஆகும். அவர்கள் இருவரும் அவ்விடங்களைத் தேர்வு செய்த பின்னர் அனைவரும் மீண்டும் தமது வரிசையைச் சரி செய்கின்றார்கள்.

மிகவும் நிசப்தம் அங்கு குடிகொள்கின்றது...... அனைத்தும் சரியாக இருக்கும் நிலையில்.....

முதலாவது சாட்சிகை அழைத்து வருமாறு காவல்துறையினருக்கு ஆணையிடப்படுகின்றது.

முதலாவது சாட்சியாக உல்லாச விடுதி வரவேற்பாளர் மன்றுக்குள் உள் நுழைகின்றார். அவருக்கு கட்டளை இடப்படுகின்றது. 2012ம் ஆண்டின் ஏப்ரல் மாதம் 13ம் திகதி தொடக்கம் 18ம் திகதிவரையான காலத்தில் அவர் பணியாற்றும் உல்லாச விடுதியில் யாராவது தங்கியிருந்தால் அடையாளம் காட்டுமாறு அக் கட்டளை கோருகின்றது.

வரவேற்பாளன் மிக நிதானமாக ஒவ்வொருவரையும் ஊடுறுவிப் பார்க்கின்றார். அவருக்கு அவர்கள் இருவரையும் மிகத் தெளிவாக அடையாளம் தெரிகின்றது. எனினும் ஏனைய அனைவரையும் கூட ஒரு தடவை.........

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## லஹிரு திரிமன்னவிற்குப் பதிலாக குசால் பெரேரா



ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக் குழாமிலிருந்து லஹிரு திரிமன்ன வெளியேற்றப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக குசால் பெரேரா சேர்க்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் போது காயமடைந்த லஹிரு திரிமன்ன, முதலாவது டெஸ்ட் போட்டியிலும் பங்குபற்றியிருக்கவில்லை. அவரது வலது கணுக்காலில் உபாதை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், லஹிரு திரிமன்னவிற்கு வழங்கப்பட்டு வந்த சிகிச்சைகளுக்குப் போதிய விளைவுகளை லஹிரு திரிமன்ன வழங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிட்ட இலங்கை அணியின் முகாமையாளர் மைக்கல் டி சொய்சா, அதன் காரணமாக லஹிரு திரிமன்னவை இலங்கைக்கு மீண்டும் திருப்பியனுப்ப முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார். லஹிரு திரிமன்னவிற்கு மாற்று வீரராக அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசால் பெரேரா அறிவிக்கப்பட்டுள்ளார். இதுவரை இலங்கை சார்பாக 19 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 9 டுவென்டி டுவென்டி சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள குசால் பெரேரா, இதுவரை டெஸ்ட் போட்டிகள் எவற்றிலும் பங்குபற்றவில்லை.

ஏற்கனவே, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர உபாதை காரணமாக இந்தத் தொடரிலிருந்து இலங்கைக்குத் திரும்புவார் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சானியா ஜோடி அதிர்ச்சி தோல்வி!



இந்த ஆண்டில் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டி மெல்போர்னில் வருகிற 13ம் திகதி தொடங்குகிறது.

இதற்கு தயாராகும் விதமாக முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள சர்வதேச டென்னிஸ் போட்டி சிட்னியில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் சானிய மிர்சா (இந்தியா) காரா பிளாக் (சிம்பாப்வே) ஜோடி, ஜர்மிலா (அவுஸ்திரேலியா) அஜ்லாத் (குரோஷி) ஜோடியை எதிர்கொண்டது.

கடந்த ஆண்டில் கலக்கிய சானியா காரா பிளாக் ஜோடி 3-6, 2-6 என்ற நேர்செட்டில் அதிர்ச்சி கோல்வி கண்டு வெளியேறியது.

## ஜெயம் பாலகம்
### குறுக்கெழுத்து புதிர்- 002



**இடமிருந்து வலமாக**

1. கவிச்சக்கரவர்த்தி
2. கனடாவின் தலைநகரம் (திரும்பியுள்ளது)
3. அன்னை ஓர் ஆலயம் இதில் அன்னை என்பதன் ஒத்த சொல் (குழம்பியுள்ளது)
5. பஞ்ச காவியங்களில் ஒன்று
6. மிகவும் அவசியமானது ஆனால் அடிக்கடி போய் நமக்கு அதிர்ச்சிக் கொடுப்பது.
8. பண்டைய கால கிரைண்டர்.
12. வறுமை என்று கூறுவர்.
13. உண்ணுதல் என்பதன் ஒத்தகருத்து சொல்
14. பனிக்கட்டி குடியிருப்பு உள்ள நாடு.
16. வாரம் ஒருமுறை வெளியாகும் கிழக்கிலங்கையின் பத்திரிகை.
19. இஸ்லாமியர்கள் ஈகை திருநாளன்று ஏழைகளுக்கு கொடுக்கும் தானம். (குழம்பியுள்ள)

**மேலிருந்து கீழாக**

1. மூன்று இதயங்களை கொண்ட மீனினம்.
4. பொதிகை மலையிலிருந்து பாயும் ஆறு.
6. இருளில் ஒளி தருவது.
7. பொறுமை, அமைதி
8. நிலமகள் எனவும் அழைப்பர் (குழம்பியுள்ள)
9. பொன்மலை என போற்றப்படுவது.
10. சதங்கை எனவும் அழைப்பர் (குழம்பியுள்ள)
11. யானைக்கு கழுத்திலிடும் கயிறு (தலைகீழ்)
15. வானம்பாடியை தேசிய பறவையாக கொண்ட நாடு
18. மகனை இவ்வாறு அழைப்பர்.

## மலிங்க 100 சதவீத அர்ப்பணிப்புடையவர்: சமிந்த வாஸ்



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க 100 சதவீத அர்ப்பணிப்புடையவர் என இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸ் குறிப்பிட்டார். அண்மைய நாட்களில் லசித் மலிங்கவின் அர்ப்பணிப்புத் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்ட நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து பாகிஸ்தானுக்கெதிராக இலங்கை அணி 2-3 என்ற கணக்கில் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரைத் தோற்ற பின்பு, முழுமையான திறமைகளை வெளிப்படுத்தாத சிரேஷ்ட வீரர்களைக் கொண்டு போட்டிகளை வெற்றி கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக லசித் மலிங்க இலங்கை அணியிலிருந்து நீக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, லசித் மலிங்க, திஸர பெரேரா இருவரும் போதுமானளவு அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதில்லை எனவும், லசித் மலிங்கவின் உடற்தகுதி தொடர்பான பிரச்சினைகளும் காணப்படுவதாகவும், அதன் காரணமாக உடற்தகுதிப் பயிற்சிகளிலும் லசித் மலிங்க பங்குபற்றுவதில்லை எனவும், பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் சமிந்த வாஸின் அறிவுரைகளை அவர் ஏற்பதில்லை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சமிந்த வாஸ், தனக்கும் லசித் மலிங்கவிற்குமிடையில் முரண்பாடுகள் எவையும் இல்லை எனவும், ஊடகங்கள் பொய்யான தகவல்களை வெளியிடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். லசித் மலிங்க தானும் சிறப்பாக இணைந்து செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். லசித் மலிங்கவின் அர்ப்பணிப்புத் தொடர்பான கேள்விகளும் தவறானவை எனக் குறிப்பிட்ட சமிந்த வாஸ், இலங்கைக்காக விளையாடும் போது லசித் மலிங்க எப்போதும் 100 சதவீதம் அர்ப்பணிப்புடன் போட்டிகளில் பங்குபற்றுவதாகவும் தெரிவித்தார். லசித் மலிங்கவின் அர்ப்பணிப்பு கேள்விக்குட்படுத்தப்பட முடியாது என்ற போதிலும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 10 ஓவர்களையும் தொடர்ச்சியாக வீசுமளவிற்கு லசித் மலிங்க தனது உடற்தகுதியைப் பேண வேண்டிய தேவையுள்ளததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## அணியில் எனது இடத்தை நியாயப்படுத்தினேன்: அஞ்சலோ மத்தியூஸ்

பாகிஸ்தானுக்கெதிரான முதலா வது டெஸ்ட் போட்டியில் சதத்தைப் பெற்றதன் மூலம் இலங்கை அணியில் தனது இடத்தை நியாயப்படுத்தியதாக எண்ணுவதாக இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் 91 ஓட்டங்களைப் பெற்ற அஞ்சலோ மத்தியூஸ், இரண்டாவது இனிங்ஸில் கடினமான சூழ்நிலையில் ஆட்டமிழக்காமல் 157 ஓட்டங்களைப் பெற்று இலங்கை அணி அப்போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொள்ள உதவினார்.

இந்த 157 ஓட்டங்கள் டெஸ்ட் இனிங்ஸொன்றில் அவர் பெற்ற அதிகமான ஓட்டங்களுமாகும்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அஞ்சலோ மத்தியூஸ், முதற்போட்டியில் 91, 157 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அணியில் தனது இடத்தை நியாயப்படுத்தியதாக எண்ணுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கை டெஸ்ட் அணியில் அஞ்சலோ மத்தியூஸின் இடம் கேள்விக்குள்ளாகிக் காணப்பட்ட நிலையில், முதற்போட்டியில் தனது சிறப்பான ஆட்டம் குறித்து மிகவும் மகிழ்ச்சிய டைவதாகவும், அணியிலுள்ள 6 துடுப்பாட்ட வீரர்கள் தங்களது கடமைகளை ஆற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசிக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், அதன் காரணமாகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட வேண்டிய தேவையிருந்ததாகக் குறிப்பிட்டார்.

## குறுக்கெழுத்து புதிர்- 001 ற்கான விடைகள்

**இடமிருந்து வலமாக**

1. விஷ்ணு சர்மா,
2. யந்திரம்,
3. சிங்குவை,
4. வனம்,
5. வியமம்,
6. சிடுசிடுப்பு,
7. விக்கினம்,
8. கலைக்கணாளர்,
9. ஆல்

**மேலிருந்து கீழாக**

1. விசயன்
2. சதாரம்
3. மாசி
4. குவலயம்
5. விலா
6. சிரஞ்சீவி
7. சிகல்
8. கல்
9. ஆலை
10. ஓம்
11. கபிலை
12. நாசி
13. வசந்தம்

✸ விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்

✸ முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/=, 150/=, 100/= பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

✸ இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-**
**ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல -001**
**32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் நிலைமாறுகால நீதியும் படுகொலையும்

**ஜோசப் பரராஜசிங்கம் நினைவுப் பேருரை: கடந்தவார தொடர்ச்சி**

அதன் பின்னர் ஆங்கில, பிரெஞ்சு மன்னராட்சி மீளக்கட்டமைக் கப்பட்ட போதும் நிலைமாறுகால கட்டமைப்பு பொறிமுறைகள் பயன் படுத்தப்பட்டதாக குறிப்பிடுகின்றார்.

நவீனத்துவ அணுகுமுறை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கின்றது. போரில் தோல்வியடைந்த நாசிப் படைகளின் போர்க்குற்றவாளிகள் கைது செய்யப் பட்டு தண்டிக்கப்பட்டார்கள். 1970 களில் தென் ஐரோப்பாவில் சர்வாதிகார வீழ்ச்சி யின் பின் ஏற்பட்ட அரசியல் மாற்று வெளியை குறிப்பிடலாம்.

இவற்றுள் போர்த்துக்கல், ஸ்பெயின், கிரேக்கம் ஆகிய ஒரு சில நாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஸ்பானிய தேச மாதிரி ஒற்றையான ஆய்வுக்குள்ளா க்கப்படுவது அவசியம் ஏனெனில் அதன் அணுகுமுறை நிலை மாறுகால நீதியின் வரையறைக்குட் பட்டதாக அமையவில்லை.

1980 களிலே லத்தீன் அமெரிக்க நாடுகளிலே இராணுவ ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மக்களாட்சி முறை நடைமுறைக்கு வந்தது. பெரும்பாலான லத்தீன் அமெரிக்க நாடுகளில் வெளிச் சென்ற இராணுவ அரசுகள் குற்றவா ளிகளைப் பாதுகாத்துக் கொள்ள ஏதுவான பொறிமுறைகளை உருவாக்கி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டனர்.

ஆர்ஜென்டினா விதிவிலக்காக நடந்து கொண்டது. போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் அதற்குரிய தண்டனை யைப் பெற்றுக் கொண்டனர். பொலிவி யாலும் நீண்ட கால இடைவெளிகுப் பின்னர் ஒரு சிலருக்கு போர்க்குற்ற தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரேசிலில் போர்க் குற்றவா ளிகள் தங்களுக்குத் தாங்களே மன்னிப் பை வழங்கிக் கொண்டார்கள். ஆனால் Sao Paulo மறைமாவட்ட பணியாளர் களின் விடா முயற்சியினால் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள். சிலி என்கிற நாடு நிலைமாறுகால நீதி யினை மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றது.

கிழக்கு ஐரோப்பாவிலும் கம்யூனிச ஆட்சியின் இரும்புக் கரங்களி லிருந்து பெரும்பாலான நாடுகள் மக்களாட்சி அரசியலில் இணைந்து கொண்டன. இரண்டாம் உலகப் போரின் பின் நிலைமாறுகால வரலாற்று ஆய்வாளர்கள் மிகக் குறைவான போர்க் குற்றவாளிகளே சர்வதேச சட்டத்திற்கு அமைய தண்டிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார்.

ஆனால் பிரதேசத்திற்கு பிர தேசம் நிலைமாறுகால நீதியின் அணுகுமுறை மாறுபட்டதாக காணப் பட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் விவசாய நில மீளளிப்பு பற்றி நிலை மாறுகால நீதி கட்டமைப்பில் அதி கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளிலும் நிலை மாறுகால நீதியின் பொறிமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டு மிக முக்கிய நாடுகளாக தென்னாபிரிக் காவையும், றொடிசியாவையும் (Rho disia) குறிப்பிடலாம்.

றொடிசியாவில் நீதி வழிமுறை செயலமைவுத் திட்டம் வெற்றி பெற வில்லை, காரணம் அப்போது ஆளு நராக இருந்த Christophe Soames போர்க்குற்றத்தில் ஈடுபட்ட அதிகாரிகள் எவருமே தண்டிக்கப்படக் கூடாது என உடன்படிக்கைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கினார்.

தென்னாபிரிக்க அரசியல் நிலைமாறு மாதிரியும் பாதிக்கப்பட்டவர் களுக்கான நீதியை முற்று முழுதாக வழங்கியது எனக் கூற முடியாது.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்த போது, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது.

கறுப்பினத்தவர் சார்பாக ஆட்சி பீடமேறிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி, அதனுடைய போர்க்குற்றம் செய்த தலைமையையும் உறுப்பினர்களைக் காத்துக் கொள்வதற்காக தேசிய கட்சியுடன் விட்டுக் கொடுப்புக்கு உடன்பட வேண்டியதாயிற்று.

தேசிய கட்சி மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்து வந்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அக்கொள்கைக்கு உடன்படாது, போர்க்குற்றவாளிகள் தண்டனைக் குள்ளாக்கப்பட வேண்டும் என்பதில் இறுக்கமான போக்கைக் கடைப் பிடித்தது.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய கட்சி, ஆபிரிக்க தேசிய காங்கிரசை பொறிக் குள் சிக்க வைக்க சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தது. கைக்கெட்டும் தூரத் தில் கிடைத்த சந்தர்ப்பத்தை மிகச் சாதுரியமாக தேசிய கட்சி பயன்படுத்தி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைமையையும், உறுப்பினர்களையும் அவர்கள் செய்த போர்க்குற்றங் களுக்காக தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனது தலைமையையும், உறுப்பினர் களையும் காத்துக் கொள்வதற்காக விட்டுக் கொடுப்பு அரசியலுக்கு இணங்கியது. இவ்வாறு உண்மை கண்டறியும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை மக்கள் சார்பாக ஆட்சிக் கதிரையேறிய கறுப்பினத்தவர் களாலே முடக்கப்பட்டது. பாதிக்கப்பட் வர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டார்கள். சாதாரணமானவர்கள் இரட்டைச் சுரண்டல் அரசியல் பொறிக்குள் சிக்க வைக்கப்பட்டார்கள் பெரும்பாலான மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

உண்மை கண்டறியும் ஆணை யங்களின் பங்களிப்பு நிலைமாறுகால நீதிக் கருத்தியலுக்கும், செயன்முறை க்கும் மிக அவசியமானது. உண்மை யைக் கண்டறிவதன் மூலம் குற்றவாளி களாகக் கணிக்கப்பட்ட பாதிக்கப் பட்டவர்கள், குற்றவாளிகள் அல்ல என நிரூபிக்கப்பட்டு சமூக நிரோட்டத்தில் சமூக வாழ்வுக்கு திரும்ப முடியும்.

குற்றவாளிகளாக இனங்காணப் பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என அடையாளப்படுத்தப்படுதல் இன்றியமை யாதது. அதன் மூலம் பாதிக்கப்பட்ட வர்களின் விடுதலைக்கான, நீதிக்கான போராட்டம் சர்வதேச ஏற்புடைமைத் தன்மையையும் அங்கீகாரத்தையும் பெறுகின்றது. போர்க்குற்றம் செய்த வர்களை இனங்காணுதலும் உண்மை கண்டறியும் ஆணையங்களின் பொறுப் பிலேயே உள்ளன. இனங்காணப் பட்டவர்களை தண்டிக்கும் பொறுப்பு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நீதிக்குழுக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

Ervin Daly உண்மை கண்டறியும் ஆணையங்களின் ஊடாக வெளிப்படுத் தப்படும் உண்மையை கேள்விக்குட் படுத்துகிறார். ஆணையங்கள் போர் நடந்த நாடுகளில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்கிற காரணத்திற்காக கட்டமைக்கப்படும் உண்மையின் உண்மைத் தன்மையை மீள் வாசிப்புச் செய்தல் அவசியமாகின்றது என்கிறார்.

நேர்மையுடன் உண்மையை, ஏற்றுக் கொள்ள அரச இயந்திரங்கள் தயாராக இருக்கின்றதா என்றால் அது சந்தேகத்திற்குரியது இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக தென்னாபிர்க்க மாதிரியை குறிப்பிடலாம். உண்மை கண்டறியும் ஆணையங்கள் எப்பேர்ப் பட்ட நிதியங்களினால் வழிநடத்திப்ப டுகின்றன. என்பதையும் கருத்தில் எடுக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

Cath Collins ன் கருத்துப்படி பெரும்பாலான ஆணையங்கள் போர்க்குற்றவாளிகளின் பெயர்களைப் பதிவு செய்யவில்லை. உண்மை கண்டறி வது நல்லிணக்கத்திற்கு இட்டுச்செல்லும் என்ற வாதம் கேள்விக்குட் படுத்தப் படலாம். காரணம் தேசத்தையும், மக்க ளையும், சமயத்தையும், சங்கத்தையும் காப்பதற்காக அரச நிறுவனங்களினால் அரச ஆதரவுடன் சண்டையிட்டவர்கள் ஒரே இரவில் உண்மையைக் கண்டறியும் ஆணையங்களினால் போர்க் குற்றவாளிகளாக அறிவிக்கப் படுகின் றார்கள்.

மக்களைப் பாதுகாப்பதற்கு பதில் அவர்களை கொன்று குவித் தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் க்கைது செய்யப்படுகின்றார்கள். இலங்கையில் நான்கு சந்தர்ப்பங்களில் உண்மையைக் கண்டறிவதற்கு முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன.

2001ல் சனாதிபதியால் நியமிக் கப்பட்ட இன வன் முறை தொடர்பில் உண்மை கண்டறியும் ஆணையம் இது 1981 லிருந்து 1984 வரையிலான வன்முறைச் சம்பவங்க ளுக்கான காரணிகளைக் கண்டறிந்து மீள்நிலைப் படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழங்க ஏற்படுத்தப்பட்டது.

பாதிக்கப்ப ட்டவர்கள் இதன் மூலம் நன்மையடைந்ததாக ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் 1983ல் நடைபெற்ற இனஅழிப்பில் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்புக் கோரப்பட்டது.

1995 ல் முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா அம்மையாரினால் கடத்தப்பட்டவர்கள் காணாமல் போனோர் தொடர்பில் ஆராய ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இது 1988 லிருந்து நடந்த சம்வங்களை ஆவணப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இக்குழு 30,000 சம்பவங்களை ஆவணப்படுத்தியது இது தவிர இவ் ஆணைக்குழுவின் கொள்கைப் பரப்புக்குள் வராத 16,000 சம்பவங்களும் ஆவணப்படுத்தப்பட்டு தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இக் குழு மனித உரிமை மீறல் களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைந்தது அதற் கமைய கண் துடைப்பு நோக்கத்திற்காக ஓரிரு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். பெரும்பாலானோர் தண்டனையிலிருந்து தப்பித்தனர். ஆனால் இக்குழுவின் பரிந்துரைகள் செயன்முறைப்படுத்தப் படவில்லை என இக் குழிவின் முன் னாள் செயலாளர் ஆ.ஊ. இக்பால் குறிப்பிடுகின்றார். அப்போதைய இராணு வத் தளபதியின் தலையீட்டினால் பரிந் துரைகள் எல்லாம் கிடப்பில் போடப் பட்டன. குற்றவாளிகள் அரச நிறுவனங் களினால் பாதுகாக்கப்பட்டு மீண்டும் அதே பணிக்காக அமர்த்தப்பட்டார்கள்.

ஆ.ஊ. இக்பாலின் கருத்துப்படி தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கடத்தலையும், காணாமல் போகச் செய்தலையும் நிறுவனமயப் படுத்தி ஏற்புடைமைத் தன்மை கொடுத்து அரசுக்கு எதிரான குரல்களை அடக்கப் பயன்படுத்திக் கொண்டது.

2006ல் அரசு, சனாதிபதி விசார ணைக்கான ஆணையத்தை உருவாக் கியது இவ் ஆணையம் 15 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. இவ் ஆணையத்தை மேற்பார்வை செய்வதற்கென சர்வதேச மூத்தோர் நிபுணர் குழு சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் அதன் அறிக்கை இதுவரைக்கும் வெளியிடப் படவில்லை. மூத்தோர் நிபுணர் குழு விசாரணை ஆணையம் தொடர்பாகவும், அதன் நேர்மைத் தன்மை, சாட்சிகள் பாதுகாக்கப்படுதல் தொடர்பில் தமது அதிருப்தியை தெரிவித்தது. ஆணை யத்தின் வெளிப்படைத் தன்மை இன்மை, அரசியல் தலையீடுகள் காரணமாக தனது சேவைகளை நிபுணர் குழு இடையிலேயே நிறுத்தி பின்வாங்கிக் கொண்டது.

வாசுகி நேசையாவின் கருத் துப்படி இலங்கை அரசாங்கங்களினால் உருவாக்கப்படும் இவ் ஆணையங்களின் வரலாறு, அந்தந்தக் காலங்களில் பதவியில் இருந்த அரசம் அரசாங் கங்களும், அதன் நிறுவனங்களும் இவ் ஆணையங்களை தங்களின் அரசியல் லாபம் கருதி கையாண்டுள்ளதுடன் அரசுக்கு எதிராக எழும் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக் களையும் அடக்குவதற்கும் பயன்படுத் தியுள்ளது.

மே 2010ல் இலங்கை அரசு கற்றுக் கொண்ட பாடங்கள்- நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. இவ் ஆணைக்குழு இனப்பிரச்சனைக்கான, 2002 போர் நிறுத்தம் முறிவடைந் ததற்கான காரணங்களை அறிய சனாதிபதியினால் விதறிந்துரைக்கப்ப ட்டிருந்தது. இவ் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையா னவை என பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் தங்களது கண்டனத்தை தெரிவித் திருந்தன. அவற்றுள், Amnesty International, மனித உரிமைகள் கண் காணிப்பகம் இவ் அமைப்புக்கள் இலங்கை அரசின் அழைப்பையும் நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்த க்கது. போர்க்குற்றம் தொடர்பில் குற்ற வாளிகளை விசாரிக்க இவ்ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. மாறாக குற்றவா ளிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக இதன் செயற்பாடுகள் அமைந்ததாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டனர்.

சர்வதேச நெருக்கடிக் குழுமம், இலங்கை அரசு நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டுக்கு தயாரில்லை என பகிரங்கமாக அறிவித்தது. பின் முள்ளி வாய்க்கால் அரசியல் வெளியில் ராஜ பக்ச அரசு அதிகாரத்தை குவிவுபடுத்தி மையத்தை நோக்கி நகர்த்தி 'ஒன்றுபட்ட இலங்கை' என்ற பரப்புரைக்கூடாக சிங்கள பௌத்த தேசிய வாதத்தை முன்னிறுத்தியது. தமிழர்களின் விடுத லைக்கான பிரச்சினையை சிறுபான்மை பிரச்சினையாக மட்டுமே அணுக முயற் சித்தது. அதை ஒரு தமிழ்த் தேசியம் சார்ந்த பிரச்சினையாக நோக்கவில்லை. இலங்கை அரசு போரில் ஒருவரும் இறக்கவில்லை என்று மறுதலிப்பை.'. மறுப்பை ஒரு பொறிமுறையாக பயன் படுத்தி வருகின்றது.

மே 2009ற்குப் பின்னர் அரசு மிக முனைப்பாக செயற்படுத்தி வரும் அரசியல் திட்டங்கள், தமிழ் மக்களின் நிலப்பறிப்பு, அரசியல் கைதிகளின் தொடர் தடுத்துவைப்பு, இன்றும் நடை பெற்று வரும் காணாமல் போதல்கள், வன்னிப்பெருநிலப்பரப்பில் கணவர் இன்றி வாழும் பெண்களின் அவல நிலை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிராக ரிக்கப்படும் உளவியல் ஆற்றுப்படுத்தல், வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் இராணுவக் குவிப்பு, சாதாரண வாழ்வில் இடம்பெறும் இராணுவத் தலையீடுகள், நிரந்தர உயர் பாதுகாப்பு வலயங்கள், தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் இவை எல்லாமே.

இலங்கையில் நிலைமாறுகால நீதிக்கான வெளி மூடப்பட்டுள்ள நிலையை அடுத்துக் காட்டுகிறது. இவ் அரசயல் வெளியில் நான் பின்-நிலை மாறுகால நீதிக் கருத்தியலை முனை வைக்கின்றேன். நிலைமாறு கால கட்டமைப்பு ஓரிரு நாடுகளில் மட்டுமே மிகச் சொற்ப பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தது.

நீதியைப் பெற்றுக் கொடுத்ததை விட குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கொடுத்தது எனலாம். நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகளில் பெரும்பாலா னவை முதிர்ச்சி பெறாமலேயே கிடப்பில் போடப்பட்டன, முடக்கப்பட்டன. அத்துடன் தொடர்ச்சியாம நீதி மீளப் பெறுமுறை நிலைமாறுகால நீதியில் மிகக் குறைவாக காணப்படுவதாக ஊயவா ஊழடடடைௌ கூறுகின்றார். புாதிக்கபட்டவர்களுக்கான நீதி அடுத்து வரும் அரசாங்களிலேயே தங்கி உள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர் களின் நீதி அரசாங்கத்தின் கைகளி லேயே தங்கியுள்ளது. இவ் நிலை மாற வேண்டுமாயின் இன்னொரு நீதிப் பொறிமுறை அவசியமாகின்றது.

அவ் மாற்றீடான நீதிப் பொறிமுறைக் கருத்தியலாக பின்- நிலைமாறுகால நீதி உருவாகின்றது. இக் கருத்தியல், செயன்முறைக் கட்டமைப்பு இலங்கைக்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

**முற்றும்.**

**அருட்தந்தை எழில்றஜன்யே.ச.**

**- நன்றி -**

**உலகத் தமிழ் செய்திகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 02 பாடம் - கணிதம்

1. 5Kg 265g என்பதை கிலோகிராமில் தருக.

2. X> -5 (-3, -4, -5, -6, -7) என்ற சமனிலிக்கு பொருத்தமான எண்ணை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.

3. கோடாத சதுரமுகி தாயக்கட்டையை உருட்டும் போது சதுர எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

4. சுருக்குக $(2 + 5) \times (3 - 7)$

5. காரணிப்படுத்துக $y(X - 5) - M(5 - X)$

6. தரப்பட்ட உருவில் a,b,c இன் பெறுமானத்தைக் காண்க




7. $X = 1/5$ எனின் $X^2 + 4$ இன் பெறுமானத்தைக்காண்க

8. தரப்பட்ட வட்டத்திலுள்ள நாணின் பெயரை எழுதுக.




9. 0.2 = ☐/20 வெற்று பெட்டியில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

10. $70 Kmh^{-1}$ என்ற சீரான கதியில் செல்லும் வாகனம் ஒன்று 30 நிமிடத்தில் செல்லும் தூரம் எவ்வளவு?

11. சுருக்குக $25^{-1/2} \times 125^{2/3}$

12. $11011_{\text{இரண்டு}}$ என்பதனை தசம எண்ணாக எழுதுக.

13. $5Y = 10X^2$ என்ற சமன்பாட்டுக்குரிய வளையியின் திரும்பற் புள்ளியின் ஆர்கூற்றை எழுதுக.

14. $6xy, 12x^2y, 18xy^3$ என்பதன் பொ.ம.சி யை காண்க.

15. ஒழுங்கான பல்கோணியின் அகக்கோணம் என்று $160^o$ எனின்
(I) புறக்கோணம் ஒன்றின் பெறுமாணம் யாது?
(II) பக்கங்களிக் எண்ணிக்கை யாது?

16. ஒரு நாற்பக்கங்களின் மூலைவிட்டங்கள் ஒன்றை ஒன்று இருசம கூறிடுகின்றது எனின் நாற்பக்களின் சிறப்பு பெயர் என்ன?

17. $ya^2 - mx = Pa^2$ என்னும் சமன்பாட்டில் a ஐ எழுவாய் மாற்றம் செய்க.

18. 8 மாணவர்களின் இடைநிறை 45Kg ஆகும் எனின் 8 மாணவர்களின் மொத்த நிலையை காண்க.

19. ஒரு பொருளை ரூபா 880 இற்கு விற்றாள் 10% இலாபம் கிடைக்குமாயின் கொள்விலை யாது?

20. சுருக்குக 123x11

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

MATHS
Paper Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
Sir T. Kumanan 0772975953
23. Sivan st Trinco.
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
Exam சகலமாணவர்களும் பங்குபெற்றலாம்.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 01

18. அருகில் காட்டப்படும் குறியீடு குறிப்பது எது?



1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
3) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்களை நிறுத்துக.
4) இடது பக்கம் வரும் வாகனங்களை நிறுத்துக.

19. டெங்கு நுளம்புகளை விரட்டுவதற்கு பயன்படுத்தும் முறை எது?
1) புகையடித்தல் 2) மலத்தின் பயன்படுத்தல்
3) DDT பயன்படுத்தல் 4) கிருமி நாசினி தெளித்தல்

20. தபால் அட்டையொன்றின் பெறுமதி எது?
1) ரூபாய் 10.00 2) ரூபாய் 4.50 3) ரூபாய் 4.00 4) ரூபாய் 30.00

21. இலங்கையின் தேசிய மரத்தினைத் தெரிவு செய்க.



22. அரச இலச்சினையில் நெற்கதிர் குறிக்கும் கருத்து யாது?
1) தன்னிறைவு 2) சௌபாக்கியம் 3) தார்மீகம் 4) நிலைதிருப்பு

23. ஆரம்பத் தையல் முறை எது?
1) கம்பளித்தையல் 2) பெருநூலோடி
3) சங்கிலித் தையல் 4) விஸ்வத்தையல்

24. உடலை நோயிலிருந்து பாதுகாக்க, உடலுக்குத் தேவையான போசணைப் பதார்த்தம்
1) உயிர்ச்சத்து, கனிப்பொருள் 2) புரதம் 3) மாப்பொருள் 4) கொழுப்பு

25. கை இராட்டினம் பய்படுத்தப்படும் கைத்தொழில்
1) மட்பாண்டக்கைத்தொழில் 2) விவசாயம்
3) மீன்பிடிக்கைத்தொழில் 4) நெசவுக் கைத்தொழில்

26. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியைத் தெரிவு செய்க



27. அயடீன் சேர்க்கப்பட்ட உப்பு பொதியில் இக்குறியீடு உள்ளது. இதன் கருத்து யாது?
1) சூரிய ஒளி, ஈரப்பதன். மற்றும் காற்று புகாத கொள்கலனில் அடைக்கவும்.
2) வெளிலில் காய வைக்கவேண்டும்
3) சூரிய ஒளியில் வைக்கக்கூடாது
4) நீரில் கழுவாமல் பயன்படுத்துக.

28. பலகையைக் குழியிடப் பயன்படும் உபகரணம் எது?
1) சீவுளி 2) வாள் 3) உளி 4) சுத்தியல்

29.  சூடாக்கப்பட்ட நீரைக் கொண்ட கேத்தல் அருகே தரப்பட்டுள்ளது.கேத்தலின் மூக்கினூடாக வெளியேறுவது எது?
1) புகை 2) நீர் 3) நெருப்பு 4) கொதிநீராவி

30. மின்குமிழ் ஒளிரக்கூடிய இணைப்பைத் தெரிவு செய்க.



31. காந்தத்துண்டொன்று சுயாதீனமாகக் கட்டித் தொங்கவிடப்பட்டால் காட்டும் திசைகள்
1) வடக்கு, கிழக்கு 2) வடக்கு, மேற்கு 3) தெற்கு, கிழக்கு 4) வடக்கு, தெற்கு

32. ஐந்தாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தொன்பது என்பதை இலக்கத்தில் எழுதுக?
(……………………….)

33. கீழ்வரும் எண்ணுக்குரிய முந்திய, பிந்திய எண்களை எழுதுக.

| முந்திய எண் | எண் | பிந்திய எண் |
|---|---|---|
| ……………….. | 9000 | ……………….. |

34. வியாபாரி ஒருவர் 500 மாம்பழங்கள் இருந்த ஒரு குவியலில் இருந்து 201 மாம்பழங்களை விற்றார். விற்பதற்கு இன்னும் எத்தனை மாம்பழங்கள் எஞ்சியுள்ளன? (…………………………………….)

35. அருகிலுள்ள சதுரக்கோட்டில் 4 கட்டங்கள் நீளமும் 3 கட்டங்கள் அகலமும் கொண்ட செவ்வகமொன்றை வரையுங்கள்.

36. அருகிலுள்ள சதுரக்கோட்டில் 4 கட்டங்கள் நீளமும் 3 கட்டங்கள் அகலமும் கொண்ட செவ்வகமொன்றை வரையுங்கள்.

37.  நிறந்தீட்டப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னாகும்?
(……………………….)

38. 515 மாம்பழங்கள் ஐந்து பெட்டிகளில் சமனான எண்ணிக்கையில் அடைக்கப்பட்டன எனின் ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
(…………………………………….)

39. பாத்திரத்திலுள்ள *5l 80ml* நீரிலிருந்து *2l 850 ml* பயன்படுத்தப்பட்டது. எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?
(…………………………………….)

40. இரண்டு மீற்றர் துணியிலிருந்து 65cm நீளமான துணி வெட்டப்பட்டது எனின், எஞ்சிய துணியின் நீளம் யாது?
(…………………………………….)

புலமைப் பரிசில் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் திரு. ந. மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கொலை.....

திரு. சுந்தரலிங்கம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து இக் கொலை தொடர்பாக வெளிப்படையாகவே படையினர் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது தெளிவா கியுள்ளது.

கொல்லப்பட்ட மாணவர்கள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மக்களின் வாக்குமூலங்கள் உட்பட காவல்துறையினரிடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு மூலங்களின் வாயிலாக விசேட அதிரடிப்படையினரே இக் கொலைகளில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என உறுதியாக நம்பக்கூடியதாய் உள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட மாணவர்கள் பயங்கரவாதிகள் எனவும் அவர்கள் கைக்குண்டொன்றை பரிசீலிக்கும் போது ஏற்பட்ட வெடிப்பினாலேயே பலியாகினர் எனவும் அரச வானொலி உரைத்ததைப் பொய்யென உடனடியாகவே உறுதிப் படுத்தியவை சட்ட மருத்துவ அதிகாரி யின் அறிக்கையும் கொல்லப்பட்ட வர்களை உடனடியாகப் படப்பிடிப்புச் செய்து பத்திரிகையில் வெளியிட்ட கொல்லப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் படங்களுமே.

## இரசாயனக்...........

விவகாரங்களைக் கையாளும் ஸ்ரீபன் ஜே. ரெப் உடனான சந்திப்பின் போது மன்னார் ஆயர் இறுதி யுத்தத்தில் விமானக் குண்டுகள், கொத்துக் குண்டுகள் மற்றும் இரசாயனக் குண்டுகளை இலங்கை இராணுவம் பாவித்ததாக தெரிவித்திருந்தார்.

இதனை மறுதளித்துள்ள இலங்கை இராணுவத் தளபதி இராணுவம் அவ்வாறான குண்டுகளைப் பாவிக்கவில்லை என்றும் விடுதலைப் புலிகளே இரசாயனக் குண்டுகளை யுத்தத்தின் போது பாவித்ததாகவும் தெரிவித் துள்ளார்.

## லசந்த............

யுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. சுதந்திரமான கருத்துக்களையும், இன ஒற்றுமைக்கான கட்டுரைகளையும், அரசியல்வாதிகளின் கறுப்புப் பக்கத்தையும் அச்சமின்றி அச்சு ஊடகத்திற்கு வரைந்து வந்த லசந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன் தனது அலுவலகத்திற்குப் பயணித் துக்கொண்டிருந்த போது அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியொன்றில் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி மரணம் எய்தினார்.

அவரது கொலை தொடர்பாக படையினன் ஒருவனும், தமிழர் ஒருவரும் கைதாகித் தடுப்பிடப் பட்டிருந்த போது மாரடைப்பால் அந்தத் தமிழர் மரணமாகினார். அதனைத் தொடர்ந்து போதுமான சர்சியங்கள் இன்மையால் மற்றைய படைச்சந்தேக நபரும் விடுதலையாகியுள்ளார்.

லசந்தவைக் கொல்வதற்குப் பின்புலமாகச் செயற்பட்டவர் முன்னாள் இராணுவத் தளபதி தான் என சனாதிபதி தன்னிடம் மூன்று தடவைகள் கூறியதாக லசந்தவின் சகோதரர் லால் விக்ரமதுங்ஹ தெரிவித்திருந்தார்.

அதனை மறுத்துள்ள சரத் பொன்சேகா, சனாதிபதியின் அரவணைப்பிலேயே அந்தக் கொலைஞர் படை செயற்பட்டதாகவும் லசந்த, உட்படப் பல ஊடகவியலாளர்களின் இன்மைக்கு அந்தக் குழுவே காரணமாக இருந்ததாகவும் எதிர்க்குற்றம் சாட்டியுள்ளார்.

## கிழக்கில் காணி...........

ஏற்படுத்தும். போர் முடிந்ததில் இருந்து கடந்த நான்கு வருடங்களாக அம்பாறை மாவட்டத்தில் நிலவும் நிலப்பிரச்சனைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக அரசாங்க அமைச்சர் களினால் பல வாக்குறுதிகள் வழங்கப் பட்டன. ஆனால் அவை நிறைவேற்றப் படாத வாக்குறுதிகளாகவே உள்ளன.

எனவேதான் நான், அரசாங்கம் அமைச்சர்கள் அளிக்கும் வாக்குறு திகளை நிறைவேற்றக்கூடிய வினைத் திறன் மிக்க பொறிமுறைகளை ஏற்படுத்தி குறித்த நிலப்பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்துமாறு கேட்கிறேன்.

இதுவே இப்பிரச்சனை தொடர் பாக மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் தவறுகளை இல்லாமல் செய்ய உள்ள ஒரே வழியாகும். அண்மையில் ஒலுவில் துறைமுகத் திறப்புவிழாவில் நிகழ்ந்த ஒரு சம்பவம் மேதகு சனாதிபதியின் மதிப்பை குறைக்கும் வகையில் அமைந்துவிட்டது. துறைமுக அதிகாரசபை அதிகாரிகளின் கவலையீனம் மற்றும் கடமையைச் செய்வதில் உள்ள விருப்பமின்மை காரணமாக இது நடந்துள்ளது. இவ் விழாவில் நிலங்களை இழந்தவர்களுக்கு சனாதிபதியினால் இழப்பீடாக வழங்கப்பட்ட காசோலைகள் வங்கியினால் திருப்பி அனுப்பப்பட்டு விட்டன.

சனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கிவரும் துறைமுக அதிகார சபை அதிகாரிகள் துறைமுகத் திறப்புவிழாவைப் பயன்படுத்தி விவசாயிகளை ஏமாற்றியுள்ளதுடன் சனாதிபதி அலுவலகத்தையும் தவறாக வழி நடாத்தி யுள்ளார். இது மிகவும் பாரதூரமான விடையமாகும். துறைமுக அதிகாரிகள் விவசாயிகளுக்குச் சேரவேண்டிய நிவாரணத் தொகையை எந்தவித தடங்கல்களும் இன்றி வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டும்.

## அமெரிக்க தூதுவரைக..

பட்டியலிடப்பட்டிருந்தவை "தொடர்கின்றன... தொடர்கின்றன" எனக் குறிக்கப்பட்டதையிட்டு அவர் கேள்வி எழுப்பியுள்ளார். பரிந்துரைகள் எந்த மட்டத்தில் தற்போது தொடர்கின்றன என்பதே அவரது கேள்வியாக இருந்தது. எனினும் அச்சந்தர்ப்பத்தில் ஆரகிருந்த அரச அதிகாரிகள் எவராலும் அதற்குப் பதிலளிக்க முடியாது போயுள்ளது.

## சோளப் பயிர்ச்........

திணைக்கள பொறுப்பதிகாரி கே.தங்கராசா தெரிவித்தார். சோளம் செய்கைக்கு மத்தியில் பெரும் பாதுகாப்பான முறையில் அடர்ந்த யானைக்காட்டுப் பகுதியில் இக்கஞ்சாசேனை செய்கை பண்ணபட்டிருந்தது.மாவட்ட மதுவரி அத்தியட்சகர் நடராஜா சுசாதரனின் பணிப்புரையின் கீழ் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

காட்டில் செய்கை பண்ணப்பட்ட மூன்று அடி உயரமான 70 கஞ்சா மரங்கள் கைப்பற்றப்பட்டன. ஒரு மரத்திலிருந்து 1 கிலோ கஞ்சாவை அறுவடை செய்யமுடியும். சுமார் 20 இலட்சம் 'ரூபாய் பெறுமதியான கஞ்சா மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கஞ்சாமரங்கள் இன்று மட்டக்களப்பு நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். நேற்று அதிகாலை முதல் நேற்று மாலை வரை இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 484,000 ரூபா........

மாதாந்தம் தமது சம்பளத்தில் இருந்து 1000 ரூபாவை சேமித்து வைத்து புதிய வருடத் தொடக்கத்தில் அத் தொகையினை மீளப் பெற்றுக்கொள்ளும் வழக்கத்தை துப்புரவுத் தொழிலாளிகள் கொண்டுள்ளனர். 2014ம் ஆண்டுக்கான கொடுப்பனவைக் கோரியபோதுதான் சுமார் 484,000 பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

"நாங்கள் வருடாந்த 12000 சேமித்தாலும் வருட முடிவில் 11000 ரூபாவையே பெறுகின்றோம்" 1000 ரூபாவை சங்க நிதிக்காக விட்டுவிடுவோம் என தெரிவித்தனர் தொழிலாளிகள்.

130 அங்கத்தவர்களைக் கொண்ட இச் சங்கத்தின் பொருளாளர் கடந்த 1ம் திகதி 463,000 ரூபாவை வங்கிலிருந்து எடுத்து வந்த போது இருசக்கர வாகனமொன்றில் வந்த இருவரால் களவாடப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார். அதனாலேயே பணக்கொடுப்பனவை ஊழியருக்கு வழங்க முடியாமற் போயுள்ளது. எனவும் தெரிவித்துள்ளார். ஆனாலும் அத்தினத்தில் வங்கியிலிருந்து 240,000 ரூபா மட்டுமே மீளப் பெறப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

தற்போது காவல்துறை விசாரணைகளை மேற்கொண்டுள்ள இச் சம்பவம் தொடர்பாக அச் சங்கத்தின் செயலாளர் சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி கருத்துத் தெரிவிக்கும் போது நாங்கள் தொழிலாளிகளின் பணத்தை மோசடி செய்யவில்லை. இப்பிரச்சனை எழுந்ததற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. பொரும்பாலான ஊழியர்கள் எம்மிடம் இடைக்கிடையே காசைப் பெற்றனர். ஆனால் நாங்கள் அவ்வாறு வழங்கும் போது எவ்வித பதிவுகளையும் செய்யவில்லை அத்துடன் எமது பொருளாளர் வங்கியிலிருந்து பணத்தை எடுத்துவரும் போது அதனைப் பறிகொடுத்துவிட்டார்.

## மாவட்ட அபிவிருத்தி....

கௌரவிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதேவேளை, போக்குவரத்துச் சேவை ஊழியர்களின் நலன்புரி அமைப்பினால் அந்த அமைப்பிலுள்ள அங்கத்தவர்களின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஐந்து மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் 'ரூபா நன்கொடை உதவு தொகையும் வழங்கப்பட்டது.

## ஆவா அணியின்.....

இளைஞனின் கைதைத் தொடர்ந்து மேலும் 9 பேர் கைதாகியுள்ளதுடன் இவர்களுடன் சம்பந்தப்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவரும் தேடப்பட்டு வருகின்றார் எனக் காவல்துறை அறிவித்துள்ளது.

## 04வயதுச் சிறுமி ........

சந்தேகநபரை எதிர்வரும் 22ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். திருகோணமலை திரியாய் பகுதியில் கடந்த 29.12.2013 ஞாயிற்றுக்கிழமை 4 வயதுச் சிறுமியை வன்புணர்ந்ததாக கைது செய்யப்பட்ட கடற்படைச் சிப்பாயே நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். சந்தேகநபரை எதிர் வரும் 22ம் திகதி அடையாள அணிவ குப்புக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்கள், சகோதரர்கள் சாட்சிய ளித்தனர். இவர்கள் சார்பில் சட்டத்தரணி ஜே.என்.லாகிர் அவர்களும் கடற்படை யினர் சார்பில் சட்டத்தரணி சுபாசினி சித்திரவேல் அவர்களும் முன் நிலையாகினர்.

## கட்சி தாவுவாரா..........

மேற்கொண்டு பொருத்தமான ஆளுங்கட்சி உயர்பீட உறுப்பினரான சனாதிபதியின் சகோதரர் ஒருவரைச் சந்தித்ததாகவும் அச் சந்திப்பு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை ஏனும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விண்வெளி செல்லும்......

பெருமை சேர்த்துள்ளார்.

நுண்ணுயிர்கள் தொடர்பாகக் கல்வி கற்று வரும் இவர் விண்வெளி ஆராய்ச்சிகளிலும் விசேடத்துவம் பெற்று விளங்குகின்றார். இவருடன் பிரித்தானிய மாணவியான டியானாவும் விண்வெளிப்பயனத்தை மேற்கொள்வார்.

## 14 வயது மகளைப்.....

கல்லை வசிப்பிடமாகக் கொண்டிருந்த ரிஸ்வானா வறுமை காரணமாகவும் அக்காலத்தில் நிலவிய அமைதியின்மை காரணமாகவும் அச் சவூதி அரேபியா நோக்கித் தனது 14வது வயதில் பயணமாகியுள்ளார். அன்றைய திகதியில் எஸ்.எம்.மருதா என்ற பெயரில் பொய்யான பிறந்த திகதியுடன் பயணமான அப் பெண்ணுடனான தொடர்பு பயணமான தினத்தில் இருந்தே அற்றுப் போயுள்ளது.

வறுமை காரணமாகவும் அறிவின்மை காரணமாகவும் அப் பெற்றோர் தமது குழந்தையைப் பற்றி தொழில் முகவரிடமே விசாரித்து வந்துள்ளனர். சில காலத்தின் பின்னர் குறித்த தொழில் முகவரால் எச்சரிக்கப்பட்ட அவர்கள் வாய்மூடி மௌனியாக இருந்ததாகத் தெரிவித்தனர்.

## திருமலையில்........

பேரருட் திரு.ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பிக்க நிகழ்வின் பாதுகாவலராக அருட்தந்தை வு.கிங்ஸ்லி ரொபட் அடிகளாரும், கௌரவ விருந்தினராக அருட்தந்தை ஞ.அன்றியாஸ் அடிகளாரும், கௌரவ விருந்தினராக அருட்சகோதரி ஆ.சாந்தினி அவர்களும் திருமதி .சாராதா ஆனந்தராஜா அவர்களும், திரு.சாமுவேல் இராஜரத்னம் அவர்களும் வருகை தந்துள்ளனர். ஞூஆீர்முஜேஊ குஜநுளுவுயு இசைக்குழுவின் ஆசிரியரான திருமதி. ஜான்சி டிரோன் அவர்களின் நெறிப்படுத்தலில் சுமார் 40 இளம் கலைஞர்கள் தமது திறமைகளைத் தனியாகவும் குழுவாகவும் அரங்கேற்றியிருந்தனர்.

அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர் அவர்கள் இப்டியான படைப்புக்கள் எமது மறைமாவட்டத்திற்கு கிடைத்துள்ள மிகப்பெரிய கொடை எனவும், திருக்கோணமலை மாவட்டத்திற்கே பெருமை தரக்கூடிய ஒரு நிகழ்வு என்பதனையும் தமது உரையில் கூறினார்.

## வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலைக்கான ஆரம்ப பிரிவு அமைப்ப தற்கான நடவடிக்கை பிரதியமைச்சர் முரளிதரன்

மட்டக்களப்பின் பிரபல பெண்கள் பாடசாலையான வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலைக்கான ஆரம்ப பிரிவினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளதுடன் அதற்கான இடத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## "உறவினர்களுடன் சேர்ந்து வாழ்தல்" நபி அவர்கள் கூறியதில் இருந்து

தொடர்ச்சி..

இரகசிய தர்மம் செய்வது அல்லாஹ்த்தாஆலாவின் கோபத்தை தனிக்கிறது. உறவுமுறையை பேணுவது (சொந்தபந்தங்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வது) ஆயுளை அதிகரிக்கிறது. என நபி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

எவர் அல்லாஹ்த்தா ஆலாவின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவரோ அவர் தனது விருந்தினரை உபசரிக் காட்டும். எவர் அல்லாஹ்த்தா ஆலாவின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவரோ அவர் உறவினரை சேர்த்து சேர்ந்து வாழவும் எவர் அல்லாஹ்த்தா ஆலாவின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டவரோ அவர் நல்லதை பேசட்டும் இல்லையெனின் மௌனமாக இருக்கட்டும்.

எனவும் எவர் தமது தேவைக் குரிய சாதனங்கள், ஆயுள் நீளமாக்கப்படவும் விரும்புகிறாரோ அவர் தம்முடைய சொந்த பந்தங்களுடன் சேர்ந்து வாழவும் என நபி அவர்கள் கூறியுள்ளார்.

நிச்சயமாக உறவினரை சேர்த்து வாழ்வது றஹ்மானுடைய றஹ்மத்தின் ஒரு கிளை ஆகும். எவர் உறவைத்துண்டித்து வாழ்வாரோ அவர் மீது அர்ராஹ்த்தாஆலா சுவர்க்கத்தை ஹராமாக்கிவிடுவான் எனவும் உறவினர் உறவைத் துண்டித்து வாழ்ந்தாலும், தாம் அவருடன் சேர்ந்து வாழ்பவரே உறவைச் சேர்ந்து வாழ்பவர் ஆவார். என நபி அவர்கள் கூறியுள்ளார்.

உறவு முறையை துண்டிப்பது அல்லாஹ்த்தாஆலாவிடம் எத்தனை கடுமையான பாவமொன்றால், இந்தப் பாவக்கரையுடன் யாரும் சுவர்க்கம் செல்ல முடியாது.

ஆனால் அதற்குரிய தண்டணை கொடுக்கப்பட்டு அந்தக்கறையை விட்டும் சுத்திகரிக்கப்பட்டால் அல்லது ஏதேனு மொரு காரணத்தால் அவர் மன்னிக்கப்பட்டு விட்டால் சுவர்க்கத் திற்கு செல்ல முடியும்.

நபிகள் நாயகம் அவர்களிடம் ஒருவர் வந்து "யாரஸீலல்லாஹ்! எனக்கு உறவினர்கள் சிலர் இருக்கிறார்கள் நான் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ விரும்புகிறேன். ஆனால் அவர்கள் என்னுடன் உள்ள தொடர்பை துண்டிக்கிறார்கள். நான் அவர்களுடன் அழகிய முறையில் பழகுகிறேன். அவர்கள் என்னுடன் வரம்பு மீறுவதை நான் பொறுத்துக் கொள்கிறேன். அவர்கள் என்னுடன் அறிவீனமாக நடந்து கொள்கிறார்கள் என்று முறையிட்டார்.

நீர் சொல்வது போன்ற நிலைமை இருக்குமானால், நீர் அவர்களுடைய வாயில் சூடான சாம்பலை திணிக்கிறீர், எதுவரை நீர் இந்தக்காரியத்தில் நீடித்து நிலைத்து இருப்பீரோ அதுவரை எல்லா நேரமும் அல்லாஹ்த்தாஆலாவின் புறத்திலிருந்து ஓர் உதவியாளர் உம்முடன் இருந்து கொண்டிருப்பார். என்று நபி அவர்கள் சொன்னார்கள்.



இன்று எமது கண்களால் காணக்கூடிய காட்சிகள் கணவன் மனைவி பிரிவு பிள்ளைகள் பெற்றோரை விட்டு பிரிந்து இருத்தல் சகோதரர்களுக்குல் பிரச்சினைகள் பிரிவுகள். இன்று மரணிக்கும் வரையும் பேசாதவர்களும் எமது சமூகத்தில் உண்டு.

மூன்று நாட்கள் பேசாமல் இருந்து மரணித்தால் ஈமான் இல்லாத நிலையில் அவன் மரணிக்கிறான். என்றும் குடும்ப உறவைத் துண்டித்து வாழ்பவன் வியாபாரத்தில் பறக்கத் இருக்காது, முகத்தில் ஒளி இருக்காது, வாழ்வில் பறக்க இருக்காது. எனவே எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து ஈருலகத்திலும் நற்பேறு பெற்றிட எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லோருக்கும் உதவி செய்வானாக

முற்றும்.....

ஜாபிர் பஸ்னா
நொக்ஸ் வீதி

## இத்தா எதற்கு

தொடர்ச்சி..

### இத்தா என்றால் என்ன?

இத்தா எனற சொல் கணித்தல் கணக்கெடுத்தல் என்ற பொருள்படும் அதாவது இன்னுமொரு திருமணத்தில் ஈடுபடாமல் இருப்பதற்கான நாட்களைக் கணக்கெடுத்தல்இது இரு வகைப்படும்.

1) கணவனை இழந்த விதவை - நான்கு மாதங்களும் (பிறைக்கணக்குப் படியான ) 10 நாட்களும்.

2)தலாக் செல்லப்பட்ட பெண் மூன்று மாத விடாய்கள் (மூன்று மாதங்கள் களல்ல)

மாதவிடாய் முடியும் வரைமா, மாதவிடாய் தொடங்கிய நாளுடன் இத்தா முடிகிறதா என்பது உலமாக்களிடையே கருத்து வேறு பாது உண்டு.

இந்த 2ம் இத்தா 1ம் 2ம் 3ம் தலாக்யாவற்றுக்கும் பொருத்தும்.

இவர்களில் எந்தவொரு காரணத்தால் மாதவிடாய் வராத பெண்களாக இருப்பின் அவர்கள் மூன்று மாதங்கள் இத்தா இருக்க வேண்டும்.

உங்கள் பெண்களில் எவரும் மாதவிடாயின் நம்பிக்கையிழந்து நீங்கள் சந்தேகத்திற்குள்ளாகி விட்டால் அப் பெண்களுக்கும் இன்னும் எவர்களுக்கும் இதுவரையில் மாத விடாய் ஏற்படவில்லையோ அவர்களுக்கும்.

"இத்தா" மூன்று மாதங்களாகும் கர்ப்ப ஸ்திரிகளுக்கு அவர்களுடைய தவணை அவர்கள் பிரசவிக்கும் வரையுள் இருக்கிறது.

இரு சாராரிலும் கர்ப்பிணியர் பெண்கள் இருப்பின் அவர்கள் குழந்தை பெறுமட்டும் இத்தா இருக்க வேண்டும்.

அல் குர் ஆன் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்..........

(தொடரும்)

## அழகுக் குறிப்புக்கள்




### பெண்களுக்கான உடை அழகு டிப்ஸ்!

✱ பேன்ட் மற்றும் வழுவழுப்பான சட்டை தான் தற்போதைய பேஷன், மாடர்னாகவும் அதே சமயம் கவர்ச்சியாகவும் இருக்கும். சுடிதார் அணிபவராக இருந்தால் சரியான பிட் உள்ள இடுப்பளவு சின்னதாக உள்ள சுடிதாரை தான் தேர்வு செய்ய வேண்டும், லூசான உடைகளை அணியக்கூடாது.

✱ நான் அலுவலகம் எல்லாம் போவதில்லை சுடிதாரும் போடுவதில்லை புடவை மட்டும் தாங்க கட்டுவேன் என்று சொல்கிறீர்களா! கவலையே படாதீங்க. உலகிலேயே டீசன்ட்டாகவும் அதே சமயம் செக்ஸியாகவும் உள்ள உடை என்றால் அது புடவை தான். நல்ல ஸ்ட்ரக்சர் உள்ளவர்களுக்கு எந்த புடவை வேண்டும் என்றாலும் கட்டலாம் அனைத்துமே சிறப்பாக இருக்கும்.



### கண்கள் குளிர்ச்சி பெற

உள்ளங்கால்களிலும், காலின் கட்டை விரல்களிலும் தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் தேய்த்து வந்தால் கண்களுக்கு பொலிவு கிடைக்கும், உடலும் குளிர்ச்சிபெறும். சந்தனம், ஜாதிக்காய் இரண்டையும் ஒன்றாக சேர்த்து அரைத்து இரவில் படுக்கும் முன் கண்களைச் சுற்றி தடவிக்கொண்டு தூங்கினால் கண்கள் குளிர்ச்சிபெறும்.

### உடலில் கொழுப்பு சேர்ந்தால்

குண்டானவர்கள் மற்றும் தொப்பையானவர்களுக்கு கசப்பான ஒரு தகவலை இலண்டன் மருத்துவ ஆராய்ச்சி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சுகாதார மேம்பாடு தொடர்பாக அந்த ஆணைக்குழுவில் மேற்கொண்ட ஆய்வில், "வாழ்க்கையில் ஒரு முறை குண்டாகி விட்டாலோ அல்லது உடலில் கொழுப்பு சேர்ந்து தொப்பையாகி விட்டாலோ மீண்டும் பழைய நிலைக்கு வரவே முடியாது" என தெரியவந்தது.

இதற்காக, 1946 மற்றும் 1958ம் ஆண்டுகளில் பிறந்த சுமார் 25 ஆயிரம் பேரிடம் 55 ஆண்டுகளாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அந்த இரண்டு குழுவினரும் 1980ம் ஆண்டு முதல் குண்டாகவோ அல்லது கொழுப்பு சேர்ந்து



## வெற்றிப் பெண்கள்

தொடர்ச்சி..

அவள் சிறிது ஒய்வு எடுத்தாலும் அது அவளுக்கு பாதகமாக அமையும். வெற்றி பெறும் பெண்களின் துன்பத்தை அளக்கும் கருவி ஒன்று இருந்தால் அது மலைக்க வைக்கும் அளவை காட்டும்.

வெற்றி கண்ட பெண்களுக்கு நிறைய கஷடங்கள் இருக்கும் போதும் அவர்கள் வெற்றி பெறுவதன் காரணம் - அவர்கள் ரிஸ்க்கான வேலைகளை செய்யத் தயங்குவதில்லை.

தடைகளைத் தாண்டி ஓடி அவர்களுடைய வாழ்க்கையை மற்றும் அவர்களை சுவாராசியமானவர்களாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு பெண்ணும் தனித் துவம் கொண்டவள், அவள் தன்னு டைய குடும்ப வாழ்விலும், தொழி லிலும் பல வேலைகளை செய்கின் றாள்.

அவள் பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியவள். அவளை பாதுகாக்க வேண்டும். நீங்கள் பெண்ணாக இருப்பதற்காக பெருமைப்ப டுகிறீர்களா?

முற்றும்.....

## வாழ்க்கைப்பாதையில் பெண்களைப் பற்றி

இன் றும் கூட பல இடங்களில் பெண்களை ஒதுக்கி வைக்கும் நிலை மாறவில்லை. பெண் பிள்ளையாகையால், அதைச் செய்யாதே, அங்கு செல்லாதே என்று அடக்கி ஒடுக்கி, பெண்களை அடிமை களாக நடாத்தும் நிகழ்வு இன்றும் நம்மத்தியில் காணப்படுகின்றது.

கல்வி கற்பதில் கூட கட்டுப் பாடுகள்! திருமணத்திற்கு முன் கல்வியைப் பயின்றால், இவ்வளவு படித்தது போதும் என்று இடையில் நிறுத்திவிட்டு திருமணம் செய்து வைக்கின்றனர்.

கட்டிய கணவன் கல்வியைத் தொடரகரம் நீட்டினால், கட்டுப்பட்டு வாழாமல் கட்டவிழ்ந்து திரிகின்றாள் என்ற ஊராரின் ஊதாரித்தனமான பேச்சுக்கள்!

எந்தவொரு இடத்தில் ஒரு பெண்தன் அறிவால், தன் அனுபவத்தால் முன்னேறிச் சென்றாலும், அவள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், கேட்கும் கேள்விகள், வசை மொழிகளால் நிச்சயமாக உள்ளத்தால் உடைந்து போகின்றாள். உண்மையில் பெண்கள் தம் வாழ்வில் பிரச்சினைகளை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டு வெற்றி கொள்ளக்கூடிய துணிவை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்று தாம் எதிர்கொள்ளும் பிரச்சினையானது, நாளை நம் குழந்தைகளுக்கு ஏற்படும் என்பதை நினைத்து அதற்கேற்ப, அதை எதிர்த்து போராடும் மனநிலையை அவர்களுக்கு குழந்தை பருவத்திலிருந்தே எடுத்தியம்பி அவர்களை வளர்க்கவேண்டும்.

இன்று நாம் மற்றவரிடம் கேட்டு மனவேதனைப்படும் கதைகள், பேச்சுகளை நாளை இன்னொருவருக்கு நாம் சொல்லி அவர்கள் மனதை நாம் வேதனைப்படுத்தக்கூடாது.

இந்நிலை தொடருமானால், இனி மலருகின்ற சமுதாயம் புதுப் பொலிவுடன் மலரும் என்பதில் ஐயமில்லை.....(தொடரும்)

[ஜெய்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று கோவிலடி கிராமத்தில் கா.பொ.த உ-த பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா



கடந்த 31.12.2013ம் திகதி பாலையூற்று கோவிலடி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட பரிசலிப்பு நிகழ்வின் போது அக்கிராமத்தில் 2013 ம் வருடம் உயர்தர பரிற்சைக்கு தோற்றி சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது இதன் போது சித்தி பெற்ற 6 மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர் இதில் மூன்று A சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் 4ம் இடத்தை பெற்ற செல்வேந்திரன்



கோபிபிரசன்னா எனும் மாணவனும் கொளரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் இவ் நிகழ்வில் இக்கிராமத்தில் உள்ள அரசாங்கத்தின் உபகார உதவி பெறும் 8 வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உணவு பொருட்களும் வழங்கப்பட்டது. இவ் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த சனசமூக உத்தியோகத்தர் திருமதி வசந்தி ஜெயராஜ் ற்கு இவ்வமைப்பினால் நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது என்பதை இவ்வமைப்பின் தலைவர் திரு S.மதிரூபன் தெரிவித்தார்.

(மதன்)

## ஆதரவாளர்களின் தரங்கெட்ட செயலின் வெளிப்பாட்டால்.. சரஸ்வதி திரையரங்கின் நிலை.



10.01.2014 அன்று அஜீத்குமாரின் நடிப்பில் "வீரம்" படம் திருமலை சரஸ்வதி திரையரங்கில் வெளியாக இருந்த வேலை அங்கிருந்த சுவரொட்டிகள், பேனர் மற்றும் கொடிகளை இனந்தெரியாத சிலர் கிழித்து சேதப்படுத்திச் சென்றுள்ளதாகவும், இச்செயல் ரசிகர்களுக்கு இடையிலான பொறாமை காரணமாக நடந்திருக்கலாம் எனவும் திரையரங்கின் உரிமையாளர் மலைமுரசிற்குத் தெரிவித்திருந்தார்.

## மரநடுகை



மட்டக்களப்பு மாநகர சபைக் குட்பட்ட கல்லடி பாலம் தொடக்கம் நாவற்குடா வரையான மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி மார்க்கத்தினை அழகுபடுத்தும் நோக்கில் தேசத்திற்கு நிழல் திட்டத்திற்கு இணைவாக கல்லடி உப்போடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி செல்வி மனோகரன் தலைமையில் அழகிய பூமரக்கன்றுகளை நடும்முகமாக கடந்த ஞாயிறு 29.12.2013 அன்று நடைபெற்ற நிகழ்வின்போது தலைவி மரக்கன்றினை நட்டுவைப்பதையும், சங்க உறுப்பினர் ஒருவர் மரம் நடுவதையும் அருகில் சங்க உறுப்பினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(உ.உதயகாந்த்)

## முதலாவது மிதக்கும் புத்தகசாலை கப்பல் திருமலை துறைமுகத்தில்....

உலகின் முதலாவது மிதக்கும் புத்தகசாலை கப்பல் நேற்று மாலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. பொதுமக்கள் இந்த கப்பலிலுள்ள புத்தகசாலையை நாளை முதல் புதன்கிழமை வரை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர். 60 நாடுகளைச் சேர்ந்த 400 தொண்டர்கள் பணியற்றும் இக்கப்பலில் 5000இற்கு அதிகமான விடயங்களிலுள்ள புத்தகங்களை கட்டுப்படியான விலையில் கொள்வனவு செய்ய முடியும். 1970ஆம் ஆண்டிலிருந்து 150 நாடுகளில் இதுவரை 4 கோடி 30 இலட்சத்திற்கு அதிகமான பார்வையாளர்களை இந்த கப்பல் வரவேற்றுள்ளது.

வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் நண்பகல் 12 மணி





தொடக்கம் இரவு 8 மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரையும் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் காலை 10 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படுவர்.

பிரவேச டிக்கெட் 50 'ரூபாவாகும். ஆனால் 12வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கும் பாடசாலை சீருடையுடன் வரும் மாணவர்களுக்கும் பிரவேசம் இலவசம் ஆகும். காலி துறைமுகத்திலிருந்து திருகோணமலை துறைமுகத்தினை வந்தடைந்த இந்த கப்பலை சிங்கள மத்திய மகா வித்தியாலயம், ஸாகிரா மகா வித்தியாலயம் மற்றும் புனித மரியாள் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் அஷ்ரப் இறங்குதுறையில் வைத்து வரவேற்றனர்.

## ஆலையடிவேம்பில் சமாதானம், புரிந்துணர்வு தொடர்பான ஆலோசனைக்குழு



ஜனாதிபதியின் மகிந்த சிந்தனை திட்டத்திற்கமைவாக அனைத்து இன மக்களிடையே நல்லினக்கத்தினை ஏற்படுத்து முகமாக நாடு பூராகவும் மாவட்ட மட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுறீதியாக சமாதானம், புரிந்துணர்வு தொடர்பான ஆலோ சனைக்குழு அமைக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் சமாதானம், புரிந்துணர்வு தொடர்பான ஆலோசனைக்குழு அமைப்பதற்காக எதிர்வரும் 2014.01.13 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும், இந் நிகழ்வானது ஜனாதிபதி ஆலோசகர் பேராசிரியர் ரஜீவ் விஜேயசிங்க அவர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந் நிகழ்வில் ஆலையடி வேம்பு பிரதேச எல்லைக் குட்பட்ட மக்கள் நலன்புரி ஸ்தாபனங்கள் , கிராமிய சங்கங்கள், சிவில் பாதுகாப்பு குழு, கிராம மட்ட தொண்டர் நிறுவனம், பாடசாலைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் பிரதேசத்தின் புத்தியீவிகள் , நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமூகம் கொடுத்து தங்களின் ஆலோசனைகளை வழங்குவதுடன் , இக் குழுவினை அமைப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கு மாறும் பிரதேச செயலாளர் அழைப்பு விடுக்கின்றார்.

(உ.உதயகாந்த்)

## மீனின் வயிற்றுக்குள் பாம்பு



வாழைச்சேனையில் சமையலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட மீன் ஒன்றின் வயிற்றுக்குள் பாம்பு ஒன்று இருந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தயுள்ளது. வாழைச்சேனை ஐந்தாம் வட்டாரத்தில் வசிக்கும் ஏ.எம்.வலிகான் என்பவர் செப்பலி வகை மீன் ஒன்றினை சந்தையில் வாங்கிச் சென்றுள்ளார். அவரது மனைவி மீனை வெட்டிய போது மீனுக்குள் இருந்து ஒன்றரை அடி நீளமான பாம்பு ஒன்று இருந்துள்ளதைக் கண்டுள்ளார்.

இச்சம்பவத்தை பார்வையிட வந்த அப்பிரதேச மீனவர்கள் மாரி காலங்களில் செப்பலி, கொய், கொடுவா போன்ற மீன் இனங்கள் நீர்ப்பாம்புகளை பிடித்துண்ணும் பழக்கம் கொண்டவை எனத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோளப் பயிர்ச்செய்கைக்குள் கஞ்சா

மட்டக்களப்பு மாவட்டத்தில் வட்டவான் அடர்ந்த காட்டுப்பகுதியில் சோளப் பயிர்களுக்கு நடுவில் செய்கை பண்ணப்பட்டிருந்த கஞ்சாத் தோட்டத்தை மாவட்ட மதுவரி திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மதுவரி திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின்போது பாரியளவில செய்கை பண்ணப்பட்டிருந்த கஞ்சாசேனை கண்டுபிடிக்கப்பட்டதாக மாவட்ட மதுவரி..........

13

# 04வயதுச் சிறுமி வன்புணர்வு
## அடையாள அணிவகுப்பிற்கு உத்தரவு



நான்கு வயதுச் சிறுமியை வன்புணர்ந்ததாகக் குற்றம் கூறப்பட்டு கைது செய்யப்பட்ட கடற்படை சிப்பாயை கடந்த 08ம் திகதி புதன்கிழமை குச்சவெளி நீதவான் தயான்மிகாகே முன்னிலையில் காவல் துறையினர் முன் கொணர்ந்தனர்..

13

# 437 பட்டதாரிப் பயிலுனருக்கு நியமனம்

திருகோணமலையில் பட்டதாரிப் பயிலுனர்கள் 437 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நியமனங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 3ற்கான நிரந்தர நியமனங்கள் ஆகும்.

மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளரின் தலைமையில் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு கருத்துத் தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர் அருள்ராசா அரச திணைக்களங்களில் கடமையாற்றி வரும் உயர் தேசிய திப்புளோமாப் பட்டதாரிககள் 68 பேருக்கும் மேலும் பட்டதாரிப் பயிலுனாக் 46 பேருக்கும் நியகனங்கள் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

# விபத்தா? விசமச் செயலா?



வீட்டினுள் நிறுத்திவைத்திருந்த வாகனம் மற்றும் பல பொருட்கள் எரிந்து சாம்பலானதற்குக் காரணம் மின்னொழுக்கினால் ஏற்பட்ட விபத்தா அல்லது விசமச் செயலா என்பதைக் கண்டறியும் நோக்குடன் காவல்துறை விசாரணைகளை முடுக்கியுள்ளது.

மட்டக்களப்பு காவல்துறைப் பிரிவுக்குட்பட்ட கூழாவடியில் உள்ள வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு வண்டி உட்பட பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு கூழாவடி ,மூன்றாம் குறுக்கில் உள்ள ஜோசப் செல்லர் என்பவரின் வீட்டில் உள்ள வாகன தரிப்பிடத்திலேய இந்த தீ விபத்து சம்பம் இடம்பெற்றதுள்ளது.

### அமெரிக்க தூதுவரைக் கடுப்பாக்கிய
# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்கின்றன... தொடர்கின்றன....

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராசாங்க திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே.ரெப் இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் வலைத்தளத்தைப் பார்வையிட்டுள்ளார்

அதன்போது அவ்வலைத்தளத்தின் "நடவடிக்கைத் திட்டம்" என்ற தலைப்பின் கீழ்.....

13



வன்னிக்குப் பயணித்த ரெப் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதர் சிசென் ஆகியோர் போரின் எச்சங்களை அவதானிக்கின்றனர்

# "கிழக்கில் முதலீடு செய்யுங்கள்"

கிழக்கில் முதலீடு செய்யுங்கள் என்ற தொனிப் பொருளில் சர்வதேச முதலீட்டாளர் மாநாடொன்றைக் கொழும்பில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முதலீடுகளுக்கு ஊக்கமளிப்பதற்காக இம் மாநாட்டை முன்னெடுப்பதாகத் தெரிவித்த அவர் சுமார் 30 முதலீட்டுத் திட்டங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் இத்திட்டங்கள் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விளக்கமளிக்கும் வகையிலேயே அம்மாநாடு எதிர்வரும் 17ம் திகதி கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா உல்லாச விடுதியில் நடைபெற இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயம், கால்நடை, மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு போன்றவை உட்பட பல்வேறு துறைகளிலும் முதலீட்டுக்கான வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.



# மாவட்ட அபிவிருத்திக்கு இவ்வருடமும் நிதி கிடைக்கும்



இந்த வருட ஆரம்பத்தில் எமது மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு பாரியளவு நிதி கிடைக்கும் என்று எதிர்பார்த்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இம்மாவட்ட அபிவிருத்திக்காக கடந்த வருடம் 3,500 மில்லியன் 'ரூபா நிதியை செலவளித்து, பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

போக்குவரத்துச் சேவையில் 25 வருடங்கள் சேவையாற்றிய ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மாவட்ட போக்குவரத்துச் சாலையில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். மட்டக்களப்பு போக்குவரத்துச் சாலையில் 25 வருடங்கள் சேவையாற்றிய 13 பேரும் மற்றும் போக்குவரத்துச்சாலை நலன்புரி அமைப்பில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய இருவரும் பொன்னாடை போர்த்திக்

13

# திருமலையில் "Symphonic Fiesta"



ஆசிரியை ஜான்சி டிரோன் அவர்களின் நெறிப்படுத்தலில் Symphonic Fiesta எனும் இசைக்குழுவின் 10 வருட பயணத்தின் நிறைவாக மேற்கத்திய வாத்திய இசை நிகழ்வொன்று கடந்த 5ம் திகதி திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் அரங்கேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மறை மாவட்ட ஆயர்

13













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org